பிரதேச ஒத்துழைப்பு: டட்லி யோசனைக்கு இந்திரா வரவேற்பு

egistered as a News paper In Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
தோன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 205
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் ஆவணி 20 ஜ: ஆகிர் 22 வெள்ளிக்கிழமை [5-9-69]

மார்ட்டின் கமிஷன் சிபார்சின்படி

யாழ்ப்பாண மாநகரசபை 25 வட்டாரங்களாக அதிகரிக்கும்

உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி மாட்டின் கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபையின் இருபத்தி ஐந்து வட்டாரங்களிலிருந்து நீக்கப்பட்டிருபத்திநாலாம், இருபத்தி ஐந்தாம் வட்டாரங்களை மீண்டும் மாநகரசபையுடன் சேர்ப்பதற்கான முயற்சிகளை உள்ளூராட்சி அமைச்சு இப்போது மேற் கொண்டுள்ளது குறிப்பிட்ட இரண்டு வட்டாரங்களையும் மாநகர சபையுடன் சேர்ப்பதற்கு நல்லூர், கொக்குவில் நிராமசபைகள் தெரிவித்த ஆட்சேபனைகளை உள்ளூராட்சி அமைச்சர் நிராகரித்து இவைகளை மாநகர சபையுடன் சேர்க்கக்கூடும், என்று சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையில் நிறை வேற்றப்பட்ட பிரேரணை ஒன்று சம்பந்தமாக மாநகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா அதன் தீர்மானத்தை உள்ளூராட்சி அமைச்சு அனுப்பி வைத்ததைத் தொடர்ந்தே அமைச்சர் திரு. ஆர் பிரேமதாசா இந்த நடவடிக்கையை இப்போது மேற்கொண்டுள்ளார்.

மார்ட்டின் கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட வட்டார நிர்ணயத்தில் நல்லூர்க் கிராமசபையின் ஒரு பகுதி 24-ம் வட்டாரமாகவும், கொக்குவில் கிராம சபையின் ஒருபகுதி 25-ம் வட்டாரமாகவும் சேர்க்கப்பட்டிருந்தன. பின்னர் இக் கிராமசபைகள் இதற்கு ஆட்சேபம் தெரிவித்ததால் அது கைவிடப்பட்டது.

ஆனால் அவ்விரு வட்டா (4-ம் பக்கம் பார்க்க)

நல்லூர் கி. ச. தலைவர் பலத்த ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி திருவாளர் 'நல்லூர் கிராமசபையின் சபை வரும் மாநகர சபை

'ஆசிரியர்கள் விஷயத்தில் அரசியல் தலையீடு கூடாது'

யாழ்ப்பாணம், வெள்ளி 'ஆசிரியர்களை ஆட்சி மன்ற உறுப்பினர்கள் தங்கள் கைப்பொம்மைகளாகப் பாவித்துவருவதால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. கல்வித் தராதரத்தினாலும், திறமையினாலும், ஆசிரியர்களின் தகைமை இன்று கணிக்கப்படுவதில்லை. ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் ஒத்தாசை புரிகிறார்களோ அவ்வளவு தூரம் அவர்களின் தகைமை உயர்த்தப்படுகிறது. இந்த நிலைமை மாறவேண்டும்''.

மட்டுவில் வடக்கில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமி மேலும் கூறியதாவது: ஆசிரியர் இடமாற்றத்திலும் நியமனங்களிலும் அரசியல் வாதிகளின் தலையீடு இருக்கக்கூடாது. அப்படியானால் தான் ஆசிரியர்களின் சிறந்த சேவையை மாணவர்கள் பெறமுடியும்.

மகாவலிகங்கையை வடமாகாணத்திற்கு திருப்புவதன் மூலம் விவசாயிகளுக்கு வாழ்வளிக்கமுடியும். பூநகரி, மன்னார் பகுதிகளில் உள்ள குளங்களை அபிவிருத்தி செய்தபின் இப் பகுதிகளில் பெரும் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்து வாலிபர்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்கலாம்.

திரு. வி. ஆனந்தசங்கரி, [illegible]

நாவலர் விழா திரைப்படம் அடுத்த மாதம் வெளியிடப்படுகிறது

நாவலர் விழா திரைப்படம் அடுத்தமாதம் வெளியிடப்படும்

பிரதமர் டட்லி ஆரம்பித்து வைப்பார்

யாழ்ப்பாணம், வெள்ளி நாவலர் சிலைத் திறப்பு விழா மாநாடு திரைப்படம் அடுத்த மாதம் வெளியிடப்படவிருக்கின்றது.

நாவலர்சபை கூட்டுப் பொருளாளரும் விழாப் பிரமுகருமான செனட்டர் ரீ. நீதிராஜா இத்தகவலை தெரிவித்தார்.

நாவலர் திரைப்படம் அடுத்த மாத நடுப்பகுதியிலிருந்து நவம்பர் மாதம் வரை இலங்கையிலுள்ள சகல தியேட்டர்களிலும் திரையிட ஒழுங்கு செய்யப்படும். இத் திரைப்படத்தை பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா ஆரம்பித்து வைப்பார் எனவும் தெரிகின்றது.

ஜூன் 24-ம் திகதி ஆரம்பமான நாவலர்சிலை பவனி, ஜூன் 29-ம் திகதி நடைபெற்ற நாவலர்சிலை திறப்பு விழா ஜூலை 2-ம்திகதிவரை நடைபெற்றநாவலர்மாநாடு ஆகியன திரைப்படமாக்கப் பட்டுள்ளது.

(கா. நி)

இந்தியாவும் சேருமா

பிரதமர் டட்லி சேனநாயக்கா அண்மையில் இந்து பிரதேச ஒத்துழைப்புப் பற்றி தெரிவித்த கருத்துக்களை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி வரவேற்றிருக்கிறார்

சம்பந்தப்பட்ட நாடுகள் உத்தர வாதம்அளிப்பதற்கு இணங்குவதால் இது நல்ல யோசனைதான் என்று பாரதப்பிரதமர் இங்கு கூறினார் ஸ்ரீ நகரில் ஓய் வெடுப்பதற்காக வந்திருந்த இந்திரா காந்தி இன்று புதுடில்லி திரும்பினர். புதுடில்லிக்குப் புறப்படுமுன் நிருபர்களிடம் அவர் பேசினார்

சீனாவும் சேருமா

பிராந்திய ஒத்துழைப்பில் சீனாவும் சேர்ந்து கொள்ளுமா என்று நிருபர்கள் கேட்டபொழுது அப்படி சேர்வதாயின் ஏற்புடைய தாய் இருக்கும்என்றார்பிரதமர்மந்திரி மீது கட்டுப்பாடு இருப்பது பற்றி அண்மையில் அவர் பேசியிருந்தது பற்றி நிருபர்கள் கேட்டபொழுது கட்டுப்பாடில்லாத அதிகாரத்தைத் தாம் கோரவில்லையென்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் தான் அந்தக்கட்டுப்பாடு இருக்க வேண்டுமேயல்லாமல் வெளியிலுள்ளவர்களிடமல்ல வென்றும் அவர் கூறினார்.

ஹோ மின்மறைவுக்கு அனுதாபம்

வடவியட்னும் அதிபர் ஹோ-சி- மின் மறைவுக்கு பிரதமர் இந்திரா கவலை தெரிவித்தார் டாக்டர் ஹோ-சி-மின் மா பெரும் தலைவர் என்று அவர் கூறினார்

ஆசிரியர் குறைகளை ஆராய விசாரணைக்குழு யாழ்ப்பாணம் வருகிறது

அளவெட்டி, வியாழன் ஆசிரியர்களின் குறைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவென ஆசிரியர் விசாரணைக்குழு இம்மாதம் 25ம் திகதி யாழ்மாவட்டத்துக்கு வர இருக்கிறது. இந்த விசாரணைக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க சகல ஆசிரியர் சங்கங்களும் அறிக்கை தயாரிக்கும் வேலையில் இறங்கியுள்ளன.

மேற்படி குழுவுக்கு சாட்சியமளிப்பதற்கான அறிக்கை பற்றி ஆராய வட இலங்கை தமிழாசிரியர் சங்கம் இம்மாதம் 9ம் திகதி கூட இருக்கிறது.

இதைப்போல் சகல ஆசிரியர் சங்கங்களும் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கூடி ஆராய்ந்து வருகின்றன.

வடஇலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. ஆ.க.மாணிக்கம் தமதுசங்க அறிக்கையைத் தயாரிக்கும் வேலையில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

இவ்வருடம் 144 வீதி விபத்துக்கள்

நல்லூர், வெள்ளி இவ்வருடத்தில் நேற்று வரை யாழ் மாவட்டத்தில் 144வீதி விபத்துக்கள் நடைபெற்றிருப்பதாக வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்தது இதில் 10 விபத்து மரணங்கள் ஏற்பட்டுள்ளன இந்த வீதி விபத்துக்களில் 71 சம்பவங்கள் குறித்து வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளன

செல்வச்சந்நிதி, நல்லூர் திருவிழாக்கள் போன்றவற்றால் இப்போது யாழ் மாவட்டத்தில் போக்குவரத்து வீதிகள் கூடியளவு அனுஷ்டிக்கப்படாமல் இருப்பதாகவும், டாக்ஸி, இ போ ச மற்றும் வாகனங்கள் எச்சரிக்கையாக வீதிகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று பொலிஸ் சுப்பிரிண்டென் தெரிவித்தார்

மகாவலி கங்கை திசை திருப்பும் வேலை:

வரவு-செலவு அறிக்கை விவாதம் முடிந்ததும் ஆரம்பமாகும்

கொழும்பு, வியாழன் மகாவலிகங்கை வடபகுதிக்கு திருப்பும் வேலையின் முதல் கட்டம் இரண்டு வருடத்தில் முடிவடைந்துவிடுமென காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி பி டி சில்வா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார் வரவு-செலவுத் திட்ட அறிக்கை [illegible] என்றும் கூறிய அமைச்சர் நன்னீர் திட்டம் அமுல் நடத்தப்பட்டதும் வடபகுதி விவசாயிகள் பெருமளவு நயம் பெறுவார்களென்றும் கூறினர்.

இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தில் சுக்கிர வாரமாகிய இன்று மாலை 6 மணிமுதல் இரவு 7 மணிவரை வித்துவான் க கிநடராஜனால் பெரியபுராண விரிவுரைத் தொடரில் ''வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்'' எனும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் வழிபாடும் நடைபெறும்

யாழ்ப்பாணத்தில் பெண் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களோ அவ்வளவு தூரம் அவர்களின்தகைமை உயர்த்தப்படுகிறது. இந்த நிலைமை மாறவேண்டும்''.

மட்டுவில் வடக்கில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் முன்னாள் சாவகச்சேரி எம் பி. திரு. வி. குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு க அழகரத்தினம் தலைமையில் நடந்த இக்

உள்ள குளங்களை அபி விருத்திசெய்தபின் இப்பகுதிகளில் பெரும் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்து வாலிபர்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்கலாம்.

திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. எஸ். பி. மயில்வாகனம், திரு. கனகசபை உட்பட மற்றும் பலர் பேசினர்கள்.

வடக்கிலிருந்து தென் இந்தியாவுக்கு

யாத்திரை செல்பவர்கள் தொகை அதிகரித்துள்ளது

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கிலிருந்து தென் இந்தியாவுக்குச் செல்லும் யாத்திரீகர் தொகை கடந்த வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மிகக்கூடுதலாக அதிகரித்துள்ளதாக அரசாங்க செயலகபுள்ளிவிபரம் ஒன்றிலிருந்துதெரியவந்துள்ளது.

யாழ்ப்பான மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு காரியாதிகாரி பிரிவிலும் சேர்க்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்தே இத் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளதாம்.

கடந்த வருடங்களிலும் பார்க்க சுமார் 3000-க்கும் அதிகமானோர் இவ்வருடத்தில் ஆலய யாததிரையை மேற்கொண்டுள்ளதாகவும், இவ்வருட இறுதியான டிசம்பர் மாதத்தில்மட்டும் தென் இந்தியா செல்ல சுமார் 2000க்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது மட்டுமன்றி பலாலி விமான நிலையத்தில் தென் இந்திய யாத்திரீகர்களின் பொருட்கள் மூலம் அறவிடப்பட்ட வரியும் இவ் வருடமே கூடுதலாகக் கிடைத்ததாகவும் சுங்க இலாகா அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (கா நி.)

ரம்பாலாவுக்கு எஸ். ஜே வி. ஆட்சேபக் கடிதம்

அளவெட்டி, வியா.

கிளிநொச்சி காங்கேசன்துறை புகையிரதசேவையில் ஈடுபடும் புகையிரதப் பெட்டிகள் குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து புகையிரத பொது முகாமையாளர் திரு ரம்பாலாவுக்கு காங்கேசன்துறை எம். பி. திரு எஸ் ஜே. வி. செல்வநாயகம். கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

மாலை 4 56 மணிக்கு யாழ் புகையிரத நிலயத்தை வந்தடையும் கிளிநொச்சி காங்கேசன்துறை புகையிரத வண்டியில் இணைக்கப்பட்ட 7 பெட்டிகள்தற்போது3 ஆக குறைக்கப்பட்டுள்ளன இதனால் அரசாங்க ஊழியர்களும் மாணவ மாணவிகளும் வீடு செல்ல முடியாது புகைவண்டியில் நின்றே செல்லவேண்டியுள்ளது.

இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தெல்லிப்பழை தமிழரசுக் கட்சியின் இணைச்செயலாளரான திரு க. சிவபாதசுந்தரம் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு மகஜர் ஒன்று அனுப்பியிருந்ததைத் தொடர்ந்து திரு எஸ். ஜே. வி. புகையிரதப் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

வட பகுதி

கடற்சாதாளையிலிருந்து 'சத்துள்ள உணவு'

மட்டுவில், வியா.

'வடபகுதியில்உள்ள கடல்களில் விளையும் கடற் சாதாளையைக்கொண்டு விஞ்ஞான ரீதியின்படி ல்ல சத்துள்ள உணவை உற்பத்தி செய்யவும் கடல் நீரிலிருந்து அழகான செயற்கை முத்தை உற்பத்திசெய்யவும் கூடிய வாய்ப்புகள் இங்கு நிறைந்து இருக்கும்பொழுது அரசாங்கத்தின் உதவியுடன், நாம் இத்துறையில் ஈடுபட்டு விருத்திசெய்து, அவற்றை பிறநாடுகளுக்கு அனுப்பினால் அவற்றுக்குப் பதில் பிற நாடுகளிலிருந்து வேண்டிய இயந்திரங்களை இறக்குமதிசெய்யமுடியும்'

இவ்வாறு மட்டுவில் வடக்கில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி கிளைக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி முன்னாள் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு,வே. குமாரசாமி கூறினார்.

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோவில் முன்றலில் திரு. கே. அழகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் பேசுகையில் கூறியதாவாது

''தண்ணீர், மின்சாரம் ஆகிய இவை இரண்டின் மூலமும்தான் இன்று எம்மை எதிர்நோக்கியுள்ள வேலை, உணவு ஆகிய திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியும். மின்சாரத்தைக்கொண்டு பல தொழிற்சாலைகளை உருவாக்கவும், தண்ணீரைக் கொண்டு இங்கு தரிசு பற்றிக் கிடக்கும் மணற்பாங்கான தரைகளில் விவசாயத்தைப் பெருக்கவும் முடியும்

இப்படி கைத்தொழிலையும், விவசாயத்தையும் விருத்தி செய்தால் எமது வாலிபர் மத்தியில் எப்படி வேலையில்லாத்திண்டாட்டம் தலை காட்ட முடியும்

(4-ம் பக்கம் பார்க்க)

நல்லூர் கி. ச. தலைவர் பலத்த ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'நல்லூர் கிராமசபையின் ஒரு பகுதியை யாழ்ப்பாண மாநகரசபையுடன் சேர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒருபோதும் சம்மதமளிக்க மாட்டோம்'

நல்லூர்க் கிராமசபைத் தலைவரானதிரு பொ.குமாரகுலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்

மார்ட்டின் கமிஷன்சிபார்சுக்கிணங்க நல்லூர் கிராமசபையின் 4-ம்,5-ம் 7-ம்,8ம் 9-ம் வட்டாரங்களை மாநகரசபையின் 24-ம் வட்டாரமாக சேர்க்க எடுக்கப்படும் முயற்சிகள் சம்பந்தமாக திரு பொ, குமாரகுலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது;

எமதுகிராம மக்கள் ஏழை மக்கள் அவர்களால் மாநகரசபை விதிக்கும் வரிகளை ஒருபோதும் கட்டமுடியாது கடைசிவரை இதனை நாம் அனுமதிக்காது எதிர்த்தே தீருவோம். நல்லூர்க்கிராமசபைக்கே வருமானம் கொடுக்கும் ஒரு இடம் திருநெல்வேலி மார்க்கட்தான். அதுவும்கூட மார்ட்டின் கமிஷன்படி மாநகரசபையுடன் சேரக்கூடியதாகவுள்ளது.

திருநெல்வேலி மார்க்கட்டும் மாநகரசபையுடன் சேர்க்கப்பட்டால் நல்லூர்க் கிராமசபையை எப்படி இயக்குவது, எனவே இதனை நல்லூர்க்கிராமசபைகடைசிவரை எதிர்த்தே தீரும்.

நல்லூர்க் கிராம சபையின் ஒரு பகுதியை யாழ்ப்பாணம் மாநகரசபையுடன் ஒருபோதும் சேர்க்கக் கூடாதென நல்லூர் கிராமசபை 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் திகதி அனுப்பிவைத்த ஆட்சேபக் கடிதம் பற்றியும் திரு குமாரகுலசிங்கம் இங்கு குறிப்பிட்டார். (கா.நி)

'புராதனநினைவுசின்னங்களை பாதுகாக்கவேண்டும்'

கோட்டை, வியாழன்

'தொல் பொருளாராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகிய [புராதன நினைவுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாப்பது இந்நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.'

இவ்வாறு ஜேர்மன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேச தொல் பொருளாராய்ச்சி இயல் பேராசிரியரான டாக்டர் ஹெயின்ஸி மோட் புனிதநகரான அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

'இங்குள்ள இசுவமுனியா போன்ற ஞாபகச் சின்னங்கள் உலகின் வேறெப் பகுதியிலும் காணமுடியாதவை இங்குள்ள மக்கள் அழகுக் காட்சிகளைக் காணுவதற்கு வேறு இடங்களுக்குச் செல்லத் தேவையில்லை ஏனெனில் அழகான பல இடங்கள் இங்குள்ளன'' என டாக்டர் மோட் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

அம்ஸ்ரடாம் பல்கலைக் கழகத்தின் தொல் பொருளாராய்ச்சித்துறை பேராசிரியரான டாக்டர் (திருமதி) வான் ஹெய்சன் டி லீயுவும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

ராஜனால் பெரியபுராண விரிவுரைத் தொடரில் ''வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்'' எனும் பொருள் பற்றி கதாப்பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் நடைபெறும்

தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 262-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
44 W 0240 - ரூ 100,000

2-வது பரிசு:
26 J 0288 - ரூ 40,000

3-வது பரிசு
13 H 0140 - ரூ 10,000

தலா ரூபா 751.40 சதம் பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம் வருமாறு:

27 R 0133	43 A 0387
11 U 0591	18 S 0956
20 V 0800	34 Z 0011
38 F 0930	28 K 0734
33 X 0048	04 J 0896
23 A 0026	15 P 0542
39 C 0613	41 J 0894
11 O 0950	18 U 0618
20 U 0866	22 M 0787
42 A 0197	17 A 0561
16 J 0738	36 P 0778
26 C 0091	42 F 0528
16 W 0255	27 X 0644
18 L 0234	15 R 0916
40 C 0725	25 E 0635
14 N 0709	20 D 0212
10 Y 0740	04 H 0884
23 R 0030	43 T 0722
43 V 0273	18 Z 0522
21 V 0196	13 T 0679
32 W 0997	37 H 0860
25 Z 0083	11 O 0553
34 Y 0802	31 U 0353
15 Q 0398	41 C 0043
15 W 0898	35 O 0088
38 Q 0035	41 P 0999
19 K 0986	11 C 0305
30 V 0585	21 Q 0654
32 L 0675	15 C 0717
19 V 0417	34 U 0236
35 X 0122	34 E 0916
07 L 0127	03 S 0915
29 A 0124	44 A 0669
08 K 0059	06 H 0445
12 G 0131	01 H 0926
15 P 0971	36 L 0169
07 K 0590	28 O 0137
45 A 0843	07 D 0263
31 F 0243	21 V 0370
12 H 0930	26 T 0242
13 Z 0083	35 K 0141
27 D 0179	29 N 0962
15 M 0985	47 C 0057
10 Z 0296	45 G 0201
28 G 0533	31 R 0324
21 C 0467	09 U 0364
21 H 0493	18 A 0950
25 B 0890	37 D 0895
13 B 0410	09 U 0466
01 B 0307	16 P 0134

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

முதல் கட்டம் இரண்டு வருடத்தில் முடிவடைந்துவிடுமென காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி பி டி சில்வா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார் வரவு-செலவுத் திட்ட அறிக்கை மீதானவிவாதம்முடிவடைந்ததும் இதற்கான வேலைகள் ஆரப்பிக்கப்படுமென அவர் மேலும் சொன்னார்

மகாவலிகங்கை தெயண்ட மாறுஊடாக பாக்குநீரிணையைச் சென்றடையும்

— —

தமிழாசிரிய சங்கக்கூட்டம்

அளவெட்டி, வியாழன்

வடஇலங்கை தமிழ் ஆசிரியர் சங்கக் கூட்டம் பண்டிதர் ச.பொன்னுத்துரை தலைமையில் சங்கக்காரியாலயத்தில் நடைபெற்றபோது தாய் சங்கமான அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தை அக்டோபர் இறுதி வாரத்தில் நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிளைச்சங்கங்களின் கூட்டங்களை அடுத்த வருடம் மாசிமாதத்துக்கு முன் நடாத்துவதென்றும் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டை அடுத்த வருடம் பங்குனி மாதம் நடாத்துவதென்றும்முடிவாகியுள்ளது.

அமைப்பு விதிகள் பற்றியும் ஆராயப்பட்டது.

விவசாயிகள் பெருமளவு நயம் பெறுவார்களென்றும் கூறினார்.

டிக்க வேண்டுமென்று பொலிஸ் சுப்பிரிண்டன் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் பெண் பொலிஸ் நேர்முகப் பரீட்சை

நல்லூர், வெள்ளி

பெண் பொலிஸாரைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று வடபகுதி பொலிஸ் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றதுவடபகுதிபொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர் சுந்தரலிங்கம் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு அஸிஸ் இன்ஸ்பெக்டர் திரு மாணிக்கம் ஆகியோர் இந்த நேர்முகப் பரீட்சையை நடாத்தினர்

வடபகுதியிலிருந்து கிடைத்த 260 விண்ணப்பங்களுக்கான இந்த நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறும் விளையாட்டும், உடல் அமைப்பும் விசேஷ திறமைகளாக நேர்முகப் பரீட்சையில் கணிக்கப்பட்டன

நாடெங்கிலுமிருந்து 15 ஆயிரம் விண்ணப்பங்கள் பெண் பொலிஸார் பதவிகளுக்கு கிடைத்திருந்தன தலைமை பொலிஸ் நிலையங்களில் இந்த நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுகின்றன

—

இ. தி. மு. க. மகாநாடு

புலோலி, வியா.

இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தின் 4-வதுமாநில மாநாடு யாழ் நகரில் நடைபெற இருக்கின்றது.

மாநாட்டின் இறுதிப் பூர்வாங்க அலுவல்களைக் கவனிப்பதற்காக நிதிக்குழுச் செயலாளர் திரு. எ. உ. நெடுமாறன், திரு எம். கிருணபராஜா (இளம் வழுதி) ஆகியோர் 2-ம் திகதிகொழும்பிலிருந்து புறப்பட்டு வவனியா, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மன்னார், கிளிநொச்சி பரந்தன், கொடிகாமம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள கழக தோழர்களுக்கு மகாநாட்டில் மேற்கொள்ள இருக்கும் கடமைகள் குறித்து விளககினார்கள்.

குழந்தைகளிடம் அன்பு காட்டுபவர்கள் குறைந்து வருகிறார்கள்

யாழ். மேயர் கவலை

அளவெட்டி, வியாழன்

''காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் நேரு தனது பிறந்த தினத்தை குழந்தைகள் தினமாக கொண்டிடினார். ஆனால் இன்று குழந்தைகளுக்கு அன்பு காட்டுபவர்கள் குறைந்துள்ளனர்.இந்த நிலை நீடித்தால் குழந்தைகள் ஒரு செல்லாக் காசாகி விடுவார்கள். ஆகவே பெற்றோர் பிள்ளைகளை மிகவும் அருமையாக கவனித்துவளர்த்து நாட்டுககு உதவக் கூடியவர்களாக திகழச் செய்யவேண்டும்.'

இவ்வாறு காங்கேசன் துறை பாலர் பாடசாலை 5 வது ஆண்டுவிழாவில் கலந்துரையாற்றிய யாழ் மேயர் திரு. சி. நாகராசா கூறினார்.

காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேயர் தொடர்ந்து பேசுகையில் குழந்தையுள்ளம் களங்கமற்றது. வஞ்சனை அறியாதது, அந்தக்குழந்தையுள்ளங்களுடன் பழகுவது குதூகலத்தை யளிப்பதாகும். நேரு, கென்னடி போன்ற தலைவர்கள் குழந்தைகளிடத்து பேரன்பு கொண்டிகுந்தனர் என்றார்.

குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் புனித பணியை மேற்கொண்டிருக்கும் சிறுவர் கல்வி நிலையத்தையும் அதன் இயக்குநரையும் மேயர் பாராட்டினார்.

இவ்விழாவில் சிறுவர் சிறுமியரின் கலைநிகழ்ச்சிகளும், விநோத உடைப்போட்டியும் காங்கேசன்துறை இளந் தமிழர் மன்றத்தினரின் ''பாசத்தின் எல்லையிலே'', ''பொன்னுத்தை'' என்னும் இரு நாடகங்களும் இடம் பெற்றன.

திரு. ஆ. சங்கரப்பிள்ளை நன்றி றினார்.

மரண அறிவித்தல்

திருமதி. அலிஸ் அன்னு எட்வேட்ஸ்

திருமதி. அலிஸ் அன்னு எட்வேட்ஸ்காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற எஸ். எம். எட்வேட்ஸின் மனைவியும், திருமதி டபிள்யு. ஈ. டி. மேதர், காலஞ்சென்ற றெஜி எட்வேடஸ், திருமதி டெய்சி ஞானப்பிரகாசம், திரு. டான் எட்வேட்ஸ் (கலால் இலாகா பரிசோதகர்), திருமதி. சில்வியா வேலுப்பிள்ளை ஆகியோரின் தாயாருமாவர். அன்னுரின் பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் 18, தேவாலய வீதியிலிருந்து கொட்டடி புதிய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இத்தகவலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.
1444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

தேவை

எட்டாம் வகுப்புவரையும் கணிதமும், விஞ்ஞானமும் கற்பிப்பதற்கு ஆசிரியை தேவை. G. C. E. காலை/மாலை வகுப்புகளும் நடைபெற இன்றன. ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், 1, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் 1373

விற்பனைக்கு

1 1/2 பரப்பு வெற்று நிலம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 1-ம் குறுக்குத் தெருவில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இராஜரத்தினம், 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (புகையிரத கடவைக்கருகாமையில்) 1370

கல்வி

29-8-69ல் ஆரம்பமாகவுக்கும் மோட்டார் டிராக்டர் டீசல் முழுநேரப் பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இன்னமும் சில காலி ஸ்தானங்கள் நிரப்பப்பட வேண்டியிருப்பதால் 10-9-69 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தரித சாரதிப்பயிற்சியும் இங்கு நடத்தப்படுகின்றது விண்ணப்பகாரர்கள் நேரடியாகவோ கடிதமூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீராஜ் ஒட்டோ மோபைல் என்ஜினியரிங்நிறுவனம், மொம்சாக்மாளிகை, மேல்மாடி, 11A & 11B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1078

யாழ்ப்பாணம், வெள்ளி சோவியத் திரைப்பட விழா ஒன்று நல்லூரில்நடைபெறவிருக்கிறது. இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க வடபிரதேசக் கிளையின் ஆதரவில் நடைபெறும் இவ் விழா இம்மாதம் 8-ம் திகதியிலிருந்து 12-ம் திகதி வரை நடைபெறும் ஐந்து தினங்களிலும் தமிழ் ஆங்கில திரைப்படங்கள் காண்பிக்கப்படும்.

காணவில்லை

2-9-69 செவ்வாய்க்கிழமை மாலையிலிருந்து குணம் என அழைக்கப்படும் ஞானச்சகரம் என்னும் 13 வயதுடைய கட்டுமஸ்தான உடல், கட்டைமுடி, நெற்றியில் கண் இமைக்குமேல்நீளமான காயத்தழும்பு உடைய இவனைக் காணவில்லை. கட்டைக் கால்சட்டை அல்லது சாரம் உடுத்திருப்பார். இவரைக் கண்டுபிடிக்கக்கூடியதகவல் தருபவருக்கு 50 ரூபா வெகுமதி தரப்படும். சி. அரசகுல இரத்தினம், உடுவில் - டச்வீதி, சங்குவேலி (மானிப்பாய் P.O.) 1374

மரண அறிவித்தல்

டாக்டர் ரி. வேலாயுதபிள்ளை முன்னர் கொழும்பை வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்திலும் அண்மையில் கொழும்பு தெங்கு சபையிலும் கடமையாற்றி தற்யோது பிஜி (Figi) தீவில உலக சௌக்கிய நிறுவன அங்கத்தவராகக் கடமையாற்றிய டாக்டர் ரி. வேலாயுதபிள்ளை பி. எச். டி. பிஜி (Fiji) தீவில் திடீர் மரணமானர். இவர் சங்கீத பரிசோதகர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், சென் தோமஸ் கல்லூரி மாணவன் ஈஸ்வரனின் அன்புத் தந்தையுமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும். 1375

உபதபால்நிலையம்

வல்வெட்டித்துறை, வியாவல்வெட்டி புதிய உபதபால் நிலையம் இம்மாதம் 15-ம் திகதி திறந்துவைக்கப்பட்வுள்ளது. தபால் இலாகாவின் உதவியுடன் வல்வெட்டி உபதபாலதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் நா. பாக்கியலிங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். இப்போது இவர் வல்வெட்டித்துறை தபால்நிலையத்தில் பயிற்சி பெற்றுவருகிறார். உபதபால் நிலையத்தை உபசபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம் திறந்துவைப்பார்'

கேள்விப்பத்திர அறிவித்தல்

மன்னார் மாவட்டம்இலுப்பைக்கடவை கிராமசபையில் இலுப்பைக்கடவை கடற்கரை மீன்பிடி ரேட்டு அமைப்பதற்கான சேவைக்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 10-9-69-ந் திகதி காலை 9-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 9-9-69-ந் திகதி மாலை 4-00 மணிக்கு முன் எமது கிராம சபையில் ரூபா 50/- கட்டுப் பணமாகவும், ரூபா 10/- விண்ணப்பப் படிவப்பணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் பெறுமதி ரூபா 10/-தும் எக்காரணம்பற்றியும் திருப்பிக் கொடுபடமாட்டாது வேண்டிய விபரங்களை எமது கிராமசபை அலுவலகத்தில் அல்லது மன்னர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

வே. கைலாயபிள்ளை
கி. ச. தலைவர்.

கிராமசபை அலுவலகம்,
இலுப்பைக்கடவை.
1-9-69. 1733

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 5—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற் சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பண்ணிரந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 இஸ்லாமியநிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்தநினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து. இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமச்சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணை, 7-35 பேச்சு, 7-45 இக்கியதாடு உரைச்

"விற்பனவு இலாகா

நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் கிளைகள் திறக்கவேண்டும்"

பருத்தித்துறை வியா. 'விஷம்போல ஏறிக் கொண்டே செல்லும் வாழ்க்கைச் செலவை ஓரளவிலாவது கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை பாதுகாக்க விற்பனவு இலாகா உதவுகிறது. நாட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் இவ்வித ஸ்தாபனங்கள் நிறுவுவதன் மூலம் ஏழை விவசாயிகளான உற்பத்தியாளரும் சாதாரண பொதுமக்களும் இடுட்டுச் சந்தைக்காரரின் இரும்புப் பிடியினின்றும் விடுபட்டு வாழக் கூடியதாயிருக்கும்' என பருத்தித்துறை விற்பனவு இலாகாக் கிளை திறப்புவிழாவில் உரை நிகழ்த்திய பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம் கூறினார். யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜே. எம். சபாரத்தினம் ஸ்தாபனத்தை திறந்து வைத்து தலைமை வகித்தார். முதல் விற்பனைப் பொருட்கள் திரு சபாரத்தினம் வாங்கினார்.

விற்பனவு இலாகா உதவி ஆணையாளர் திரு என். வாமதேவா, பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு என் நடராசா, பிரபலவர்த்தகர் திரு பி. வீரவாகு ஆகியோரும் உரையாற்றினர். கிளைப்பொறுப்பதிகாரி திரு கி.எஸ்.எஸ். சுந்தரம் நன்றி கூறினார்.

"14 வருடங்களாக தமிழ் பகுதிகளில் முன்னேற்றமில்லை"

யாழ்ப்பாணம் வெள்ளி 'நான் ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்த பொழுது நாவற்குழியில் ஒரு துணை நகரம் அமைக்க திட்டம் போட்டிருந்தேன் அத் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண நகரத்திலுள்ள ஜனநெருக்கடியைத் தீர்த்திருக்க முடியும். இதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கும் நாவற்குழிக்கும் இடையில் போக்குவரத்து சேவையை விஸ்தரிக்கவும் திட்டமிட்டிருந்தேன். இக் திட்டம் கடந்த 14 வருடங்களாக அமுல் செய்யப்படாமலிருந்து வருகிறது.'

நாவற்குழியில் நேற்றிரவு நடந்த தமிழ்காங்கிரஸ் கூட்டத்தில் முன்னாள் எம். பி. திரு வி. குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு ரி. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது:

கடந்த 14 வருடங்களாக தமிழ் பகுதிகளை பொருளாதார துறையில் எவ்வித முன்னேற்றமும் அடையவில்லை. இயற்கை வளங்களைக்கொண்ட சாவகச்சேரிப்பகுதி எந்தவிதத்திலும் முன்னேறவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

நாவற்குழி புகையிரத நிலையத்தைச் சுற்றியுள்ள காணிகளை சீர்திருத்தி டிராக்டர் மூலம் பொறியியல் சம்பந்தமான தொழில் நிலையம், பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவ குடிசனம் அதிகரித்துவரும் இவ்வேளையில் காடுகளை வெட்டி கமம் செய்வதற்கு போதிய தண்ணீர் தேவை. இதற்கான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும்.

திரு. வி. ஆனந்தசங்கரி, திரு வே. சிவசுப்பிரமணியம் திரு. ரி. ராஜகுலசேகரம் திரு பி. இராசையா, திரு ரி. ஜெயதாஸ் உட்பட மற்றும்பலர் பேசினார்கள்.

சமய அறிவுப் போட்டி

சுழிபுரம், வியாழன் வழக்கம்பரை சனசமூக நிலையச் சபையினர் நவராத்திரி தினத்தையொட்டி சமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். போட்டி அமைப்பாளராக திரு சி. வெங்கடாசலபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

மரம் நாட்டு இயக்கம்

அங்குரார்ப் பணம்

அளவெட்டி, வியாழன் "யாழ் மாவட்டத்தில் பல மாதங்களாகமழை இல்லாததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு சில இடங்களில் உள்ள மக்கள் குடிக்க நீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். மழை பெய்வதற்கு உயர்ந்த மரங்கள் இல்லாததால் தான் இப்படியாக கஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகவே

வெடிவிபத்தில் சிறுவன்

பருத்தித்துறை, வியாழன் தனது சகோதரியின் பூப்பு நீராட்டு வைபவத்தில் மிக உற்சாகத்துடன் ஈடுபட்டு வெடிகள்கொளுத்திய தவம் என்னும் கரவெட்டி மிழக் கைச் சேர்ந்த ஒரு சிறுவன் வெடியாலேற்பட்ட படு காயங்களுடன், படுத்தித் துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான்.

ஓய்வுபெற்றார்

சித்தன்கேணி, வியாழன் ஆனைக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் இம்மாதம் முதலாந் திகதி முதல் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். இவருக்குச் சேவை நலம் பாராட்டுவிழா ஒன்றும் நடாத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இடமாற்றம்

சித்தன்கேணி, வியாழன் ஆனைக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியர் திரு. என். ஏரம்பமூர்த்தி இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து சங்கானை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம்பெற்றுச் சென்றுள்ளார்

வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

63-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
விஜயா-சூரேஷ் கலையில்

குழந்தைக்காக

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரைடிக்கட்டுகளே

வீரவாகு ஆம்பலாந்தோட்டை

வீட்டில் பற்றிப் பெருமை



சோனி TR-627

ட்ரான்சிஸ்டர் ரேடியோவைப பற்றிப் பெருமை.

அவளது அழகான வீட்டிலே அதி அற்புதமாக அமைந்துள்ளது சோனி! அவளுக்கு பெருமை அளிப்பது முழுக்க இழைவரி வடிவம் கொண்ட சோனி TR-627. மிக வசியானதும் கூட. அவளுக்குப் பக்கத்தில் சோனி இருப்பதால், அவள் ஒரு கணமுமே சோர்வாக இருப்பதில்லை.

உங்கள் வீட்டின் அலங்காரத்திற்கு இசைந்த வர்ணங்களில் சோனி TR-627 ஐப் பெறலாம்.

சீடில்ஸ் சினரேடியோ

புரொண்ட் வீதி, கொழும்பு. கிளைகள். பமபலப்பிட்டிய கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை.

SC47-05 MASTER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயா: சுரேஷ் கமலைனஸ்

குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் முருந்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த

எங்க ஊர் ராஜா

யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, நடித்த

பால்குடம்

யாழ்நகர் வெலிங்டன்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ணா ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

பக்த பிரகலாதா

(கஸ்ட்மென் கலர்)

பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணை, 7-35 பேச்சு, 7-45 ஐக்கியநாடு உரைச்சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

இசைக்கச்சேரி

முனீஸ்வரம், வியா.

சிலாபம் முனீஸ்வரம் தேவஸ்தானத்தில் உடப்பு வண்டியனார் உபயம் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின் விசேட நிகழ்ச்சிகளாக நாவற்குழிமகாவித்தியாலய இசை ஆசிரியை, 'சங்கீத ரத்னம்'' திருமதி கமலம் மகாலிங்கம், இராமநாதன் இசைக்கல்லூரி மாணவிகள் செல்விகள் சௌந்தரவல்லி, கோமளவல்லி, உமா மகேசன் சகோதரிகள் முதலியோருடைய இன்னிசைக் கச்சேரிகள் மிகவும் சிறப்பாக நிகழ்ந்தன. கே சித்தி விநாயகம் வயலினும், எம். என். செல்லத்துரை மிருதங்கமும் வாசித்து நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள். வில்லிசை நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

வல்வெட்டித்துறை

ரஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30.
ஸ்ரீபோயா, போயா காலை 10-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த

முகூர்த்த நாள்

இன்று மட்டும்

வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
ஸ்ரீபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நடித்த

தொழிலாளி

REGAL JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m
Poya Pre-Poya 4 Shows
Sean Connery,
Claudine Auger
in
THUNDERBALL

MANOHARA
JAFFNA

Daily 4, 7, & 10-00 p.m
Poya, Pre-Poya 4 Shows

WAR AND PEACE

டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

நாவற்குழி புகையிரத நிலையத்தைச் சுற்றியுள்ள காணிகளை சுவீகரித்து ஒரு டிராக்டர் யந்திரத் தொழிற்சாலை நிறுவவும், பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவவும் திட்டமிட்டிருந்தேன். இவற்றை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. இன்னும் 20 வருடங்களில் கால் நடைகள் மறைந்து எல்லாம் யந்திரமயமாகிவிடும். அதன்பின் இப்பகுதி ஒரு நகரமாக மாறிவிடும்.

முததமிழ்விழா போட்டி முடிவுகள்

வெள்ளவத்தை, வியா.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் நடத்திய முத்தமிழ் விழாப் போட்டியில் பரிசுபெறுவோர் விபரம்வருமாறு:-

கவிதைப் போட்டி

1ஆம் பரிசு: திரு. வே. குமாரசாமி, கல்வயல், சாவகச்சேரி; 2-ஆம் பரிசு: திரு. அ. மகாலிங்கம், நவாலி தெற்கு, மானிப்பாய்; 3ஆம் பரிசு: திரு. எம். ஏ. கபூர், 'கவிஞர் யுவன்' வைத்திய ஆலோசனைக் கந்தோர், பெரிய ஆஸ்பத்திரி, மட்டக்களப்பு.

சிறுகதைப் போட்டி

திரு. பொ. கயிலாசநாதன் இறக்குமதிக்கிளை, உணவுத் திணைக்களம், கொழும்பு; திரு. பொ. பத்மநாதன், குமாரவீதி, மாத்தளை; திரு. ச. சிறீரங்கன், மஞ்சத்தடி தெற்கு, இணுவில், சுண்ணாகம்.

நாடகப்போட்டி

பரிசுபெறும் தகுதியுடைய நாடகங்கள் பெறப்படாமையால் பின்வருபவர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்படுகிறது.

செல்வி ரஞ்சனிதேவி காளிராசா, மே/ப. கே. கே. மதிவதனன், கச்சேரி, கொழும்பு

கட்டுரைப்போட்டி

பண்டிதர் க. வீரகத்தி, நெல்லியடி மகாவித்தியாலயம், கரவெட்டி. திரு. செ. தங்கராசா, பான்ஸ் இடம், கொழும்பு, திரு. என். பாலகந்தன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்

பேச்சுப்போட்டி

திரு. ஆறுமுகநாதன் மகாதேவன், உள்நாட்டிறைவரித் திணைக்களம், கொழும்பு, திரு. க. புண்ணியமூர்த்தி, நகர்காவலர், மேலதிகப்படை நிலையம், கொழும்பு, திரு எம். கே. இராகுலன், நகர்காவலர் தலைமை அலுவலகம், கொழும்பு

பாதிக்கப்பட்டுள்ளதோடு சில இடங்களில் உள்ள மக்கள் குடிக்க நீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். மழை பெய்வதற்கு உயர்ந்த மரங்கள் இங்கு இல்லாததால் தான் இப்படியாக கஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகவே மழை பெய்து விவசாயத் துறையை முன்னேற்றவும், மக்கள் கஷ்டம் நீங்கவும் காரியாதிகாரி பிரிவுகள் தோறும் மரம் நாட்டும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது'' என மரம் நாட்டு இயக்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து உரையாற்றிய யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் கூறினார்.

காரியாதிகாரி பிரிவுகள் தோறும் மரம் நாட்டும் திட்டத்தின் அங்குரார்ப்பணக் கூட்டமும். கிராம அபிவிருத்தி போதனாவகுப்பும் இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் யாழ். விவசாய விசாலிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர், தென்மராட்சி காரியாதிகாரி திரு ஆர் சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

''எமது பகுதியில் முன்பு ஏராளமான வேம்பு'' பனை ஆகிய மரங்கள் இருந்தன அவைகள் தறிக்கப்பட்ட போதும் இதற்குப்பதிலாக மரங்கள் நாட்டப்படவில்லை உயர்ந்த மரங்களில்லாமையால் மழை இல்லாமல் போனது இதற்காக விவசாயப் பகுதி விதைகளையும் சகல பகுதிகளிலும் நாட்ட இருக்கிறது. இதற்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்'' என மேலதிக அரசாங்க அதிபர் கூறினார்.

ஆசிரியர் இடமாற்றம்

படுத்தித்துறை, வியாழன்

உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு வி. இளைய தம்பி சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் இன்னும் ஓராண்டு காலத்தில் இளைப்பாறவிருக்கிறார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு கே. இராசசேகரம், பருத்தித்துறையைச் சேர்ந்த புட்டளை மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார் இவருக்கு நெல்லியடிமத்திய மகா வித்தியாலய ஆசிரியரும் மாணவரும் ஒரு பிரிவுபசாரம் நடாத்த விருக்கின்றனர்.

ராணிக்கு ஒரு தோழி!

உங்கள் மேனியின் கட்டிளமைக் கவர்ச்சியைக் காத்து வரும் ராணி சந்தன சோப்புக்குத் தோழியாக விளங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் பவுடர் ராணி சந்தன டல்கம் பவுடர்.

தூய சந்தனத்தின் குளுமையையும் பொன் வண்ணப் பொலிவையும் உங்கள் மேனிக்கு நாள் முழுதும் தருவன-

ராணி

சந்தன சோப்பு
சந்தன டல்கம் பவுடர்.

இவை இரண்டும்
கவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் தயாரிப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவியட்னும் அதிபர் ஹோ-சி-மின் காலமானர்

ஆட்சி பாத்தை 26 பேர் கொண்ட அதிகார சபை பொறுப்பேற்றது

ஏழு நாள் துக்கம் அனுஷ்டிக்க ஹனேய் அறிவிப்பு

ஹனேய், செப். 4

வடவியட்னும் ஜனதிபதி ஹோ-சி-மின் காலமானர். அவருக்கு வயது 79. கடந்த சில வாரங்களாகவே சுகவீனமுற்றிருந்த டாக்டர் ஹோ சி மின் உடல்நிலை நேற்றுமுன்தினம் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகவும் கடந்த இரவு காலை சுமார் 9 47 மணிக்கு மரணம் அவரை அணைத்துக்கொண்டதாகவும் ஹனேய் வானொலி அறிவித்தது.

டாக்டர் ஹோ சி-மின் மரணத்தை யொட்டி வடவியட்னுமில் ஏழுநாட்கள் தேசிய துக்கம் அனுஷ்டிக்கும்படி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஹோ-சி-மின் மரணமானதால் அவர் வகித்துவந்த அதிகாரப் பொறுப்புகளை 26 பேர் கொண்ட அதிகாரசபை பொறுப்பேற்றிருக்கின்றது.

டாக்டர் ஹோ-சி-மின் கடந்த இரவு மரணமான போது வடவியட்னும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் பலரும் அவர் பக்கத்தில் இருந்தனர். மிகவும்வயதாகி விட்டபோதிலும் அவர் உயிரைக் காப்பாற்றுவதற்காக டாக்டர்களும், கம்யூனிஸ்ட் தலைவர்களும் பெரும் பாடுபட்டார்கள். வடவியட்னும் தனது 24-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு விமரிசையான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தவேளையில் இந்தத் துக்கரமான நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. ஹோ-சி-மின் கடுமையாக சுகவீனமுற்றதுமே சுதந்திரக் கொண்டாட்ட ஏற்பாடுகள் எல்லாம் ரத்துச் செய்யப்பட்டன.

வடவியட்னுமில் கம்யூனிஸ்ட் ஆட்சியை உருவாக்கியது மட்டுமன்றி தென்கிழக்காசியாவிலேயே கம்யூனிஸம் தழைப்பதற்கு டாக்டர் ஹோ-சி-மின் பெரிதும் பாடுபட்டிருக்கிறார். அவர் தம் வாழ்க்கை முழுவதுமே போராட்டங்களில் செலவழித்தவர்.

ஹோ - சி - மின் வாழ்க்கை குறிப்பு

மத்திய வியட்னுமில் 1890 மே மாதம் 19-ம் திகதி ஹோ-சி-மின் பிறந்தார். வியட்னும் அப்பொழுது பிரஞ்சு இந்தோசீனாவின் ஒரு பகுதியாகவிருந்தது. அவருக்கு தலைப்பெயர் எங்கு யென்-தாட்-தான்ஹ் என்பதாகும். ஒன்பது வயதாகு முன்பே காலனி எதிர்ப்பு இயக்கமொன்றின் தகவல் பையனுக அவர் வேலை பார்த்தார்.

பின் ஸ்தாபகர்களில் அவரும் ஒருவராக இருந்தார். மூன்றாண்டுகளின் பின்னர் அவர் மாஸ்கோ சென்று அங்கு பயிற்சி பெற்றார். அவர் ஆலியாவுக்குத் திரும்பி வந்தபொழுது பிரஞ்சு அதிகாரிகளால் நாட்டில் இல்லாதபொழுதே மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்.

சமயதிட்சை

ஊர்காவற்றுறை, வியா. சரவணை தேவபுரம் கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் வைத்து சென்ற வெள்ளிக் கிழமை இப்பகுதி மக்களுக்கு சமய தீட்சை அளிக்கப் பட்டது.

பஞ்சத்துக்கு 42 ஆயிரம் பேர் பலியாம்

ஜெய்ப்பூர், செப். 4

பஞ்சகாலத்தில் ஜெய்சால்மர், பார்மர், பிக்கானீர், ஜோத்பூர் ஜில்லாக்களில் 42,000 பேர் மாண்டனர் என்று ராஜஸ்தான் சட்டசபையில் ஜனசங்க கோஷ்டித் தலைவரானகிடு பைநான்விங்ஷேக் கவாஸ் கூறினர். அரசு கொடுக்கபோதுமான தீவனங்களையும் தண்ணீரையும் கொடுக்க முடியாததால் அந்த ஜில்லாக்களில் 40 லட்சம் கால்நடைகள் மரித்துவிட்டன் என்றும் அவர் சொன்னர்.

முதல் மந்திரி திடு. மோகன்லால் சுகாதியா பதிலளிக்கையில் நோய்களினால் சாவுகள் ஏற்பட்டன என ஒப்புக்கொண்டார். ஆனல் எதிர்க்கட்சி அங்கத்தவரின் வர்ணனை ரொம்ப மிகைப்படுத்தப் பட்ட தா

காவேரி தண்ணீர் பிரச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலை பேசி இன்றி கஷ்டம்

ஊர்காவற்றுறை, வியா. சரவணைத் தபால் நிலையம் அமைக்கப்பட்டு பல வருடங்களாகியும் தொலை பேசி வசதி செய்துகொடுக்கப்படாமையால் சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பெரிதும் கஷ்டமடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டி உடன் தொலைபேசி வசதி செய்து இப்பகுதி மக்களின் குறையைத் தீர்க்கும்படி இளைஞர் மன்றம் சம்பந்தப்பட்டவர்களை கோரியுள்ளது.

தமிழ்நாட்டு செய்திக்கோர்வை

திருமலையில் உபஜனதிபதி

இந்தியாவின் உப ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. பாட்டக் ஏழுமலைக்குப் போய் சுவாமி தரிசனம் செய்தார். உப ஜனதிபதி தம்பதிகள் கோவில் மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்கள்

ஏழுமலையான தரிசிக்கப் போகும் வழியில் உபஜனதிபாட்டக் சென்னையில் வந்திறங்கியபோது தமிழ் நாடு கவர்னர் உஜ்ஜல்சிங்கும், முதல்வர் கருணாநிதியும் அவரை வரவேற்றார்கள்.

ராஜாஜி வேண்டுகோள்

தேச உடமையாக்கப்படுவதை எதிர்க்கும் சக்திகளுடன் பகிரங்கமாக சேரு மாறும் தனிப்பட்டவர் சுயநலத்துக்காகலஞ்சம்கொடுப்பதை நிறுத்துமாறும் தொழில் துறைதலைவருக்கு ராஜாஜி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சுதந்திரா சஞ்சிகையில் அவர் எழுதியிருப்பதாவது: கம்யூனிஸத்துக்குள் பொதிந்துள்ள பொருளாதாரத் தவறே தேசவுடமையாகும் இதை காந்திஜி முற்றிலும் கண்டித்தார். ஆகவே சோஷலிஸ்டுக்கள் வகுத்துள்ள சோஷலிஸத்தை அவர் எதிர்த்தார் தொழில் துறைதலைவர்களின் சொந்த நலனை பாதிக்கும் என்பதால் அதை அவர் எதிர்க்கவில்லை ஆனல் மக்களை அடிமைகளாக்கும் என்பதாலும் தேசிய உற்பத்தியைக்கெடுக்கும் என்பதாலும் அவர் எதிர்த்தார். அரசியல் அதிகாரவேடைக்காரர்களை பாதிக்கும் குறுகிய கால தேர்தல் நோக்கங்கள் மூலம் இந்தியாவுக்கு விமோசனம் ஏற்படமுடியாது. நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை ஆதரிப்பவர்கள் சுயநல சக்திகளின் செல்வாக்கின் கீழ் இருப்பதாக அப்பாவி மக்களிடம் இவர்கள் கூறுகிறார்கள். இந்தியாவின் பிரதம மந்திரியின் அரசுமயக் கொள்கைகளை எதிர்ப்பவர்களின் ஓரே நோக்கம் கோடிக் கணக்கான மக்களின் பெரும்நல மும் சுதந்திரமாகும் அதற்கு தேசஉடைமையால் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது

கொலை முஸ்லிம்கள் ஹர்த்தால்

கும் என்றும் அவர் கூறினர். 40 லட்சம் கால்நடைகள் மரித்தனஎன்ற கூற்றை அவர் மறுத்தார். கண்ணை மூடிக்கொண்டு குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது என்றும் அவர் கூறினர்.

ஆந்திராவில் மதுவிலக்கு முற்றுக நீக்கப்படும்

காங்கிரஸ்கட்சியே தீர்மானித்துள்ளது

ஐதராபாத், செப். 3

ஆந்திர மாநிலத்தில் இப்போது பாதிக்கு மேற்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு அமுலில் இருந்துவருகிறது. இந்த பகுதிகளிலும் மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு கூடிய விரைவில் மாநிலம் முழுவதும் கள்ளுக்கடைகளை திறக்க வேண்டும் என்று ஆந்திர சட்டசபை காங்கிரஸ்கட்சி கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் இப்போது 11 மாவட்டங்களிலும் மதுவிலக்கை ரத்துச்செய்துவிட்டு கள்ளுக்கடைகளை திறக்கவேண்டும் என்று கூட்டத்தில் காங்கிரஸ் எம் எல் ஏக்கள் அனைவரும் கோரினர்கள்

இதை முதல் மந்திரி பிரமாணந்த ரெட்டியும் ஏற்றுக்கொண்டார். ஆனல் கள்ளுக்கடைகளை திறக்கும் தேதிபற்றி முடிவுசெய்யப்படவில்லை

பல மாதங்களுக்கு முன்பு ஆந்திரா முழுவதுமே கள்ளுக்கடைகளை திறக்கவேண்டும் என்று முதல் மந்திரியிடம் 160 காங்கிரஸ் எம் எல் ஏக்கள் மனு கொடுத்தது நினைவிருக்கலாம்

மதுவிலக்குத் தோற்றுவிட்டதால் மாநிலங்கள் தங்கள் நிதி வசதியைப் பெருக்கிக்கொள்ள மதுக் கடைகளைத் திறக்கலாம் என்று 5-வது நிதிக்கமிஷன் கூறியுள்ள யோசனை பற்றி இந்தக் கூட்டத்தில் பரிசிலிக்கப்பட்டது.

இதுவரை கள்ளுக்கடைகள் திறக்கப்படாமல் இருக்கும் மீதியுள்ள 11 மாவட்டங்களிலும் மதுவிலக்கை ரத்துச்செய்துவிட்டு கள்ளுக்கடைகளை திறக்கவேண்டும் என்று கூட்டத்தில் காங்கிரஸ் எம் எல் ஏக்கள் அனைவரும் கோரினர்கள்

இதை முதல் மந்திரி பிரமாணந்த ரெட்டியும் ஏற்றுக்கொண்டார். ஆனல் கள்ளுக்கடைகளை திறக்கும் தேதிபற்றி முடிவுசெய்யப்படவில்லை

பல மாதங்களுக்கு முன்பு ஆந்திரா முழுவதுமே கள்ளுக்கடைகளை திறக்கவேண்டும் என்று முதல் மந்திரியிடம் 160 காங்கிரஸ் எம் எல் ஏக்கள் மனு கொடுத்தது நினைவிருக்கலாம்

'தமிழ் தெரிந்த ஆணையாளர்வேண்டும்' கி.ச.தீர்மானம்

உடுவில், வியாழன்

'யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் சிறிதளவேனும் தெரியாத பொலிஸ் உத்தியோகத்தரை நியமிப்பதால் தமிழில் கொடுக்கப்படும் புகார்களை பதிவு செய்வதில் பலத்த சிரமம்ஏற்படுகிறது. எனவே தமிழ்ப்பகுதி பொலிஸ் நிலையங்களில் உடனடியாக தமிழ் தெரிந்த பொலிசாரைநியமிக்கவேண்டும்.' என்ற தீர்மானம் உடுவில் கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது தலைவர் திரு. முத்துலிங்கம் தலைமையில் கூட்டம் நடந்தது.

உள்ளூராட்சி மன்றங்களின் தமிழ்க் கடிதங்களுக்கு தமிழில் பதில் அளிப்பதும், தமிழ் பேசும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தங்கள் தங்கள் உள்ளூராட்சி மன்றக குறைபாடுகளையும் நிர்வாக சம்பந்தமான விடயங்கள் பற்றியும் பேசுவதற்கு தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு தமிழ் ஆணையாளரை நியமிக்கப்பட வேண்டும் என்றும், தீர்மானிக்கப்பட்டது.

பஸ் ஆற்றில்விழுந்து மூவர் பலி

புனலூருக்கு அருகே தனியார் பஸ் ஒன்று கல்லாடம் ஆற்றில் விழுந்ததால் டிரைவரும் கண்டக்டரும் கொல்லப்பட்டார்கள். ஒரு பிரயாணியும் பலியானர். பிரயாணிகள் 14 பேருக்குக் காயம் ஏற்பட்டது.

கபார்கான் சென்னை வருவார்

எல்லைகாந்தி கபார்கான் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது டிசம்பர் மாதத்தில் சென்னைக்கும் விஜயம் செய்வார் என்று தெரிகிறது.

"பட்டங்கள் கொடுப்பது சங்ககால வழக்கம்"

உடுவில், வியாழன்

"கிராமத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் உழைப்பவர்களை நாம் தகுந்த முறையில் கௌரவிக்கவேண்டும். அவர்களுக்கு பட்டங்களும் பாராட்டுக்களும் கொடுப்பது இன்று மட்டு நடைபெறுவதல்ல. சங்ககாலம் முதல் கொண்டு இப்பழக்கம் தமிழ் மக்கன்டையே பரவியிருந்து வந்தது. ஒரு வரை அவரின் பணியை ஊக்குவிக்கவும், உஷார் படுத்தவும் வேண்டி நாம் அவர்களுக்கு தலை, வால் கட்டுமாப்போல் பட்டங்கள் கொடுத்து கௌரவிக்கிறோம். 'சேர்', 'டாக்டர்' என்பன அவ்வாறு கொடுக்கப்படுபவையே" என்று மானிப்பாய் கிராம சபையின் தலைவர் திரு. எஸ். மார்க்கண்டு பேசுகையில், "மக்கள் தான் கிராமத்துக்கு அல்லது நாட்டிற்கு முக்கியமானவர்கள். அவர்களின்மனநிறைவு தான் செழிப்புக்கு மூலகாரணம். மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவும், சமாதானமும் நிலவுதல் அவசியம்" என்றர்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். கதிரவேலு பேசுகையில் வழங்கப்பட்ட இக் கௌரவிப்பு தேநீர் விருந்து விழாவிற்கு அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

மானிப்பாய் கிராம சபையின் தலைவர் திரு. எஸ். மார்க்கண்டு பேசுகையில், "மக்கள் தான் கிராமத்துக்கு அல்லது நாட்டிற்கு முக்கியமானவர்கள். அவர்களின்மனநிறைவு தான் செழிப்புக்கு மூலகாரணம். மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவும், சமாதானமும் நிலவுதல் அவசியம்" என்றர்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். கதிரவேலு பேசுகையில் வழங்கப்பட்ட இக் கௌரவிப்பு தேநீர் விருந்து விழாவிற்கு அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

ஞ்சு இந்தோசீனுவின் ஒரு பகுதியாகவிருந்தது. அவருக்கு தலைப்பெயர் எங்குயென்-தாட்-தான்ஹ் என்பதாகும். ஒன்பது வயதாகு முன்பே காலனி எதிர்ப்பு இயக்கமொன்றின் தகவல் பையனுக அவர் வேலை செய்தார். பாரம்பரியமான சீன - வியட்னுமிய ஆரம்பக் கல்விக்குப் பின் 1902-ல் பிரஞ்சுக்கப்பல் ஒன்றின் மூலம் ஐரோப்பாவுக்கு வந்தார்.

குசினி வேலை

1904-ல் லண்டனில் சார்ல்டன் உணவு விடுதி குசினிகளில் அவர் வேலைசெய்தார் அதன்பின் நியூயோர்க்கில் சிலகாலம் இருந்துவிட்டு பாரிஸ்வந்து அங்கு குடி அமர்ந்தார்.

1920-ம்ஆண்டில்உருவான பிரெஞ்சுகம்யூனிஸ்ட் கட்சி அங்கு பயிற்சி பெற்றார் அவர் ஆசியாவுககுத் திரும்பி வநதபொழுது புரட்சி நடவடிக்கைகளுக்காக பிரஞ்சு அதிகாரிகளால் நாட்டில் இல்லாதபொழுதே மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார். 1931-ல் பிரிட்டிஷாரின் ஹாங்காங் காலனியில் 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார்.

மா-சே-துங்கின் பிரபல்யமான 'நீண்ட பயணம்' என்ற பவனியிலும் அவர் கலந்துகொண்டார் 1942ல் சீனுவில் சிறைவைக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் நேசநாடுகளுக்காக வியட்னுமில் தகவல் சேகரித்துத்தருவதாக ஒப்புக்கொண்டதன் பேரில் அவர் விடுவிக்கப்பெற்றார்.

கிண்டல் பெயர் நிலை பெற்றது

ஹோ-சி-மின் என்பது அவருடைய சொந்தப்பெயரல்ல சீனுவில் சிறையிருந்த பொழுது சிறைக்காவலர்களால் ஹோ-சி-மின் என்று கிண்டலாக அழைக்கப்பட்டாராம். ''ஹோ! ஒளி தருபவரே'' என்பதுதான்அதன் பொருளாம். ஆனுல் அப்பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.

1945-ல் ஜப்பானியர் சரணடைந்தவுடன் ஹோ-சி-மின் வியட்னுவில் தமது மாகாண அரசை அமைத்தார். அடுத்த ஆண்டில் அதன் அதிபராகவும் தெரிவு செய்யபபட்டார்.

அதே ஆண்டில் பிரஞ்சு அரசுக் கெதிராக தேசிய விடுதலைப் போரை ஆரம்பித்தார். 1954ல் ஜெனிவாவில் ஏற்பட்ட உடன்படிக்கை யொன்றின்படி நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரு பகுதிகளும் இணைவது சம்பந்தமாக வாக்கெடுப்பு நடத்துவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சிறு தாடியும் மீசையும் கொண்ட இந்த மெலிந்த மனிதர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையே சமீபகாலமாக ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தார். ஏழுஆண்டுகளுக்குமுன் சீனுவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் தகராறுகள் தோன்றியதிலிருந்து இருதரப்புக்கும் நல்ல பிள்ளையாய் இருந்து உதவிகளைப் பெற்று வந்தார் அவர் ஒரு பிரமச்சாரி, கவிஞர் பிரபல கொன்பியுஸியஸின் சீடர். அதன் காரணமாகவே தாடி வைத்துக் கொண்டாராம் குழந்தைகளிடம் மிகவும் பிரபல்யமாக இருந்த இவரை 'ஹோமாமா' என்று குழந்தைகள் அழைத்தார்கள்.

இரி கவலை

டாக்டர் ஹோ-சி-மின் மறைவு அஸ்ஸியாவுக்கும் உலகத்துக்கும் பெரிய இழப்பாகும் என்று இந்திய ஜனுதிபதி ஓர் இரங்கல் செய்திகள் கூறியிருக்கிறுர்.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு சவால்

டாரண்டோ, செப். 4 ஸெபாஸ்டியோ தம்பதிகளுக்கு மணமாகி 25 வருஷங்களாகின்றன. ஸ்ரீமதி கார்மேலா ஸெபாஸ்டியோ 24-வது குழந்தையை ஈன்றெடுத்தாள்.

தெற்கு இத்தாலியிலுள்ள டாரண்டோவில் இவர்கள் வசிக்கிறுர்கள்.

இவர்களுடைய குழந்தைகளில் 12 இறந்து விட்டன. மீதமுள்ள 11ம் ஆண்கள். இப்பொழுது பிறந்ததும் ஆண்குழந்தை.

இன்னும் குழந்தைகள் பெற உத்தேசித்திருக்கிறீர்களா என்று நிருபர்கள் கேட்டார்கள்.

''கடவுள் குழந்தைகளை அனுப்பினுல் நான் என்ன செய்ய முடியும்! குழந்தைகளை வரவேற்கத்தான் முடியும்!'' என்று அந்த அம்மையார் பதிலளித்தார்.

என ஒப்புக்கொண்டார். ஆனுல் எதிர்க்கட்சி அங்கத்தவரின் வர்ணனை ரொம்ப மிகைப்படுத்தப்பட்டதா அவர் மறுத்தார். கண்ணை மூடிக்கொண்டு குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது என்றும் அவர் கூறினர்.

காவேரி தண்ணீர் பிரச்னை

தமிழ்நாடு - மைசூர் அரசுகள் தகராறு

சென்னை, செப். 4 காவேரி நதியின் தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக தமிழ்நாடு அரசுக்கும் மைசூர் அரசுக்குமிடையில் தகராறு ஏற்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

தமிழ்நாடு அரசின் சம்மதம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் காவேரி தண்ணீரை உபயோகிக்கும் காரியங்களை மைசூர் அரசு மேற்கொள்ளவேண்டும் என்று மைசூர் அரசு நியமித்த கமிட்டியொன்று சிபார்சு செய்ததைத்தொடர்ந்து இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இதுசம்பந்தமாக தமிழ்நாடு மந்திரிசபை அவசரமாகக்கூடி ஆராய்ந்தது. இந்த விஷயம் குறித்து மத்திய மந்திரிகளுடன் பேசுவதற்காக தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. சாதிக்பாட்சா போகவிருக்கிறுர்

கான மக்களின் பெருநலமும் சுதந்திரமாகும் அதற்கு தேசஉடைமையால் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது

சென்னை முஸ்லிம்கள் ஹர்த்தால்

ஜெருசலத்தில்அல்-அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து சென்னையிலுள்ள முஸ்லிம்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

லஞ்சம் தர முயன்றவர்கள்

வைத்தியக் கல்லூரியில் ஓர் இடம் வாங்கித் தருவதற்காக மந்திரியொருவகு 500 ரூபாய் லஞ்சம் கொடுக்க முயன்றதாக ஆடலழகன், டாக்டர் நாகராஜன் ஆகிய இருவர்மீதும் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறுர்கள் இவ்விருவரும் இப்பொழுது பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறுர்கள்

காயம் ஏற்பட்டது.

கபார்கான் சென்னை வருவார்

எல்லைகாந்தி கபார்கான் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது டிசம்பர் மாதத்தில் சென்னைக்கும விஜயம் செய்வார். எல்லைகாந்திக்கு 80 லட்சம் ரூபாய் பணமுடிப்பு ஒன்றைக் கொடுப்பதற்கு சார்கான் பிறந்த நாள் கொண்டாட்ட கமிட்டித்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் நிதி சேகரித்துக் கொண்டிருக்கிறுர்.

அப்பலோ-11 வீரர்கள் தமிழ்நாடு விஜயம்

அப்பல்லோ-11 வீரர்கள் ஆம்ஸ்டிரோங், ஆல்டிடிரின் கொலின்ஸ் ஆகிய மூவரும் புது டில்லிக்கு வரும் போது தமிழ்நாட்டுக்கும் விஜயம் செய்யக் கூடும் என்று கூறப்படுகின்றது.

பரவியிருந்து வந்தது. ஒரு வரை அவரின் பணியை ஊக்குவிக்கவும், உஷார் படுத்தவும் வேண்டி நாம் அவர்களுக்கு தலை, வால் கட்டுமாப்போல் பட்டங்கள் கொடுத்து கௌரவிக்கிறோம். 'சேர்', 'டாக்டர்' போன்ற பட்டங்களை முன்னும், 'ஜே. பி.', 'எம். பி' போன்ற பட்டங்களை பின்னுக்கும் கொடுத்து அவர்களை உஷார்படுத்துகிறோம். ஒருவரிடம் வேலை வாங்க வேண்டுமானுல் அவருக்கு தலை, வால் கட்டுதல் அவசியம். இது பண்டைய வழக்கில் ஒன்ருகும்.''

புதிய சமாதான நீதிபதியாக நியமனம் பெற்ற உடுவில் கிராமசபை முதலாம் வட்டார உறுப்பினர் திரு. வீரகத்திப்பிள்ளை சீராளசிங்கத்திற்கு அளிக்கப்பட்ட கௌரவிப்புவிழாவில் பேசிய உடுவில் கிராம சபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

உடுவில் கிராமசபைத் திறந்த வெளியரங்கில் கிராமசபை ஊழியர்களி செழிப்புக்கு மூலகாரணம். மக்களிடையே பரஸ்பரம் நல்லுறவும், சமாதானமும் நிலவுதல் அவசியம்'' என்றுர்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். கதிரவேலு பேசுகையில், நீதிபதி சேவை புனிதமானது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை அனுசரித்து தகுந்த முறையில் நடுநிலை நின்று தீர்ப்பு வழங்குவது அவசியம் என்று கூறினுர்.

சுன்னுகம் பட்டினசபை அங்கத்தவர் டாக்டர் ஆ. நடராசா, உடுவில் கிராமசபை உபதலைவர் திரு இராஜதுரை, திரு இ பொன்னம்பலம் ஆகியோர் உட்பட கிராமசபை பிரமுகர்கள் பலரும் புதிய சமாதான நீதிபதிக்கு நல்வாழ்த்துக் கூறினர்.

புதிய சமாதான நீதிபதி திரு வீ சீராளசிங்கம் தமக்களிக்கப்பட்ட கௌரவிப்புக்கும், வாழ்த்துக்களுக்கும் நன்றி கூறினுர் சகல பிரமுகர்களும் அடங்கிய புகைப்படமும் எடுக்கப்பட்டது.

இஸ்ரேலை எதிர்த்து

அரபு நாடுகள் ஒருங்கிணைந்து போராட அறைகூவல் கெய்ரோ மகாநாட்டில் தீர்மானம்

கெய்ரோ, செப். 4 இஸ்ரேல் பலவந்தமாகப் பிடித்துவைத்துக்கொண்டிருக்கும் அரபுப் பிரதேசங்களை விடுவிப்பதற்கு அரபு நாடுகள்எல்லாம் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்று கெய்ரோவில் கூடி ஆலோசனைகள் நடத்திய ஐந்து அரபுநாடுகளின் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறுர்கள்

ஜெருசலத்தில் அல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கெய்ரோவில் ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான், சிரியா, ஈராக் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கூடி ஆலோசனைகள் நடத்தினுர்கள்.

இந்த மகாநாட்டின் இறுதிக்கட்டத்தில் சூடானும் கலந்துகொண்டது. ஆலோசனைகளின் பின்னர் இந்த நாடுகளின் தலைவர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில் இஸ்ரேலுக்கெதிரான போராட்டத்தில் அரபுநாடுகள் எல்லாமே ஒருங்கிணைந்து செயல்பட முன்வர வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது

அல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டதையும் இந்த நாடுகள் பலமாகக் கண்டித்துள்ளன.

இஸ்ரேலியரை விடுவிக்க எதிர்ப்பு

அண்மையில் திசைதிருப்பப்பட்டு சிரியாவில் இறக்கப்பட்ட அமெரிக்க விமானத்திலிருந்து சிறைபிடிக்கப்பட்ட இஸ்ரேலியரில் எஞ்சியிருக்கும் இருவரையும் விடுவிக்கவேண்டாம் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச்சேர்ந்த அரபு கொமாண்டோக்கள் சிரியாவை வற்புறுத்தியிருக்கிறுர்கள். சிரியா அதிகாரிகளுக்கு இவர்கள் அனுப்பியிருக்கும் அவசரத் தந்தியில் இஸ்ரேலியர் பிடித்து வைத்துள்ள அரபுக்கொமாண்டோக்களை விடுவிக்கும் வரை இஸ்ரேலியரை விடுக்கவேண்டாம் என்று கேட்டிருக்கிறுர்கள்

லெபனுன் மீது இஸ்ரேல் விமானத்தாக்கு

நேற்று லெபனுனின் தென்கிழக்குப் பகுதியில் இஸ்ரேலிய விமானங்கள் பறந்து குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலில் இரு லெபனுன்காரர் காயமடைந்ததாக அறிவிக்கப்கட்டது.

விமானிகள் சங்கம் எதிர்ப்பு

அண்மையில் அமெரிக்க விமானம் துப்பாக்கி முனையில் திசை திருப்பப்பட்டு சிரியாவில் இறக்கப்பட்டது குறித்து சர்வதேச விமானிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றது.

இதுசம்பந்தமாகப் புகார் தெரிவிப்பதற்காக ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டை இந்தச் சங்கப் பிரதிநிதிகள் சந்திக்கவிருக்கிறுர்கள். அவர்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்பதற்கு யுதாண்ட் இணக்கம் தெரிவித்திருக்கிறுர்

சுழிபுரம்

சமூக பொருளாதார முன்னேற்றக் கழகம்

அளவெட்டி, வியா. ''ஒரு நாட்டில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானுல் அம் முன்னேற்றம் சமூக அடித்தளத்திலிருந்து ஏற்படவேண்டும். மேலெழுந்த வாரியாக திணிக்கப்படும் கொள்கைகளும் நடைமுறைகளும் சமூகஅடித்தளத்தில் எவ்விதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தமாட்டாது'' என சுழிபுரம் சமூக பொருளாதார முன்னேற்றக்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய திரு. கா. நடராசா கூறினுர்.

கழக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. தம்பிராசா, உபதலைவர். திரு. ச. சுப்பிரமணியம், காரியதரிசி- திரு. த. சந்ததியார் உபகாரியதரிசி செல்வி கா. இராஜேஸ்வரி, தனுதிகாரி: திரு. கி.கமலநாதன். நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம், திருவாளர்கள் கே. நடராசா, கி. சிறீதரன், க. சுபாஸ்சந்திரபோஸ், ந. சிறீதரன், சி. கணேசானந்தன், கே. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

---

25 வருட சேவை பற்றி அறிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி 'இரண்டாவதுஉலக மகாயுத்தத்தின் காரணமாகப் பொருள்களின்விலைநாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வந்தது. அன்றியும் பணம் படைத்தவர்களும் தனிப்பட்ட வியாபாரிகளும் பெருந்தொகைப் பொருள்களை வாங்கிப் பதுக்கி வந்தனர். இக்கஷ்டத்தை நீக்குவதன் பொருட்டு அரசாங்கம் உணவுப் பொருள்களையும் மற்றைய உபஉணவுப் பொருள்களையும் பங்கீட்டுப் புத்தகம் மூலமாகப் பொது மக்கள் பெறுவதற்கேற்ற வசதியை 1942ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். இக்கஷ்டங்களை உணர்ந்த சுன்னுக வாசிகளும் சில பிரமுகர்களும் ஒன்றுகூடி 30-4-43ல் ஒரு பண்டசாலைச்சங்கம் நிறுவத் தீர்மானித்தனர். அச்சங்கம் தான் சுன்னுகம் ஐக்கியபண்டசாலைச் சங்கமாகும்'' என சுன்னுகம் ஐக்கிய பண்டசாலைச் சங்கத்தின் இருபத்தைந்து வருட சேவைபற்றி வெளியிடப்பட்ட அறிக்கையில் காரியதரிசி திரு. நா. பொன்னம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்த திருவாளர்கள் இ. குமாரசாமி, இ. கனகரத்தினம், பிரம்மஸ்ரீ சி. கார்த்திகேசையர், சு.பொன்னம்பலம், அ. இராமசாமி ஆகியோருக்கும் முன்னுள் தலைவர்கள், காரியதரிசிகள் ஆகியோருக்கும் காரியதரிசி அறிக்கையில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது பண்டசாலை தற்பொழுது 4354 அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களுக்கும் பொருட்களை விநியோகம் செய்து வருவதுடன் 1944ம் ஆண்டு தொடக்கம்புடவை வியாபாரத்தையும் நடாத்தி வருகின்றது. இதனுல் உற்பத்தியாளர்களிடமிருந்து உள்ளூர்ப் பொருள்களை நேரில் பெற்றுக் கொள்வதால் பொதுமக்களின் நன்மதிப்பும் ஆதரவும் இவ்வியாபாரத்தில் போதியளவு அதிகரித்துள்ளன. இச்சங்கத்தில் தற்பொழுது 359 அங்கத்தவர்களாக இருக்கின்றனர். 25 வருடங்களாகச் சேவை செய்து வரும் இப்பண்டகசாலைக்குச் சொந்தமாக ஒரு கட்டடம் இதுவரையும் இல்லாதிருப்பது ஒரு பெருங்குறையாகும்.

இப்பண்டசாலையில் முகாமையாளருடன் ஏழு பேர்கள் கடமையாற்றுகிறர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம் வெள்ளி கொக்குவில் கிழக்குகோணுவளை ஞவைரவர் சுவாமி கோவிலில் இம்மாதம் 12-ம் திகதி மாலைவாலஸ்தாபனம் நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

நமக்குள்ள சங்கடங்களை அறிவு, நல்லெண்ணம், அன்பு, சேவை முதலியவற்றைக்கொண்டு தீர்க்க வேண்டும். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 20-ந் திகதி (5-9-69)

ஹோ சி மின் மறைவு

வடக்குவியட்னுமின்ஜனுதிபதியான ஹோ சி மினின் மறைவு அந்த நாட்டுக்குமட்டுமன்றி ஆசியாவுக்கே பெரிய நஷ்டமாகும். எழுபத்தொன்பது வயதுவரை வாழ்ந்த இந்த சரித்திர புருஷரின் வாழ்க்கை உலக மக்களின் சுதந்திரப்போராட்டசரித்திரத்திலே மேலான இடம்பெறுமென்பதில் ஐயமில்லை.

ஏழைக் குடும்பத்தில் பிறந்த அவர், பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து தம்மைப் பூரணமாகத் தம் நாட்டு மக்களுக்காகவே அர்ப்பணித்தார். அவரது அரசியல் கொள்கைபற்றி கருத்துவேற்றுமை உள்ளவர்களும்கூட, அவர் தம் நாட்டு விடுதலைக்காகச் செய்துள்ள தியாகத்தையும், வீரச் செயல்களையும் போற்றுமலிருக்க முடியாது.

இரண்டாவது உலகயுத்தம் முடிந்ததும், இந்தோ சீன மக்களுக்கு அரசியல் சுதந்திரம் அளிக்க பிரஞ்சு ஏகாதிபத்திய சக்திகள் மறுத்து, போர் தொடுத்தனர். வருடக் கணக்காக உறுதியுடன் போரிட்டு எதிர்த்து, டியன் பென்பூ எனுமிடத்தில்அவர்களைத் தோற்கடித்தபெருமை ஹோ சி மின்னையே சேரும். யுத்த நிறுத்தஒப்பந்தத்தைச் செய்து கொண்டனரென்றுலும் வியட்னும் பிரச்னை தீரவில்லை. 17-வது அட்சரேகையில் நாடு பிரிக்கப்பட்டது. இரு பகுதிகளையும் இணைத்து ஒன்றுபடுத்துவதைப்பற்றி, நாடுமுழுதும்தேர்தல்நடத்தி, இதைத் தீர்மானிப்பதென்ற ஜெனீவா ஒப்பந்த ஏற்பாடு இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இதற்குப் பதிலாக வடக்கு வியட்னுமுக்கும், தெற்குவியட்னுமுக்கும் கடும்போர் மூண்டு தெற்கு வியட்னும் கட்சியை அமெரிக்காவே ஏற்றுநடத்தியது. ஹோ சி மினுக்குரஷ்யா, சீனம் இவற்றின் ஆதரவு கிடைத்தது.

பல்லாண்டுகளாக நடந்து வந்த இந்தப் போராட்டத்திலே ...

புதிய ஜனுதிபதியான நிக்ஸன் உணர்ந்து, இந்தப் போராட்டத்திலிருந்து அமெரிக்கா விடுபடுமென்று அறிவித்து, தன்படையிலே25ஆயிரம் பேரை முதல்முறையாக திருப்பிஅழைத்தது பெரிய காரியம்.

ஒரு சுண்டைக்காய்நாடான வியட்காங், அமெரிக்க வல்லரசை எதிர்த்து நின்று, வெற்றிகரமாகப்போராடி, அதைப் பின்வாங்கும்படி செய்ய முடிந்ததாயின், அதற்கான பூரண பெருமையும் காலஞ்சென்றதலைவர் ஹோசிமின்னையே சாரும். ரஷ்யா, சீன இவற்றின் ஆதரவை அவர் பெற முடிந்ததாலேயே இதனைஅவரால் சாதிக்க முடிந்ததென்பது பகிரங்க ரகசியம். அமெரிக்காவை எதிர்த்துப்போராடியதைவிட, சமீப வருடங்களில் ரஷ்யா, சீனம் இவ்விருபோட்டி கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் பொது நண்பனுக இருந்து இருதரப்புஉதவியையும் அவர் பெற முடிந்துள்ளது அவரது ராஜதந்திர வெற்றியைக் குறிப்பதாகும்.

தங்கள்ஒப்பற்ற தலைவரான ஹோ சி மின்னின் மறைவுக்குப்பின், வடக்கு வியட்னுமில் அதிகாரம் வகிக்கும் 26 பேர் கொண்ட ஓர் ஆட்சிக்குழுவின் பொறுப்பு சுலபமானதல்ல. வியட்னுமில் போர் நின்று அமைதி ஏற்பட்டு, அந்நாட்டை மீண்டும் ஒற்றுமைப் படுத்தவேண்டிய பெரியவேலை காத்துள்ளது. ஆசியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவது சரியல்லவென்பதை அமெரிக்கா உணர்ந்து கொண்டுள்ளது உண்மையாயின் அதன் வியட்னும் கொள்கை பெரிதும் மாறக்கூடும். ஜெனீவா ஒப்பந்தப்படி, வியட்னுமில் பொதுத் தேர்தல் நடந்து, நாட்டை ஒன்றுபடுத்துவதுபற்றி தீர்மானிக்கவேண்டிய விஷயத்தில் அமெரிக்கா உள்ளிட்டுப் பல வல்லரசுகளும் ஒத்துழைப்பதாயின், அந்த துரதிருஷ்ட நாட்டு மக்கள் மீண்டும்அமைதியாக, ஒற்றுமையாக வாழ் ...

'பொருளாதாரவளர்ச்சிக்கான இலக்கியங்கள் தமிழில்தோன்றவேண்டும்

முத்தமிழ் விழாவில் பேச்சு

வெள்ளவத்தை, வியாழன்

உள்நாட்டு இறைவரிக் கிளைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தினர் திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவையொட்டி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய முத்தமிழ்விழா நேற்று காலை 9 மணிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களஆணையாளர் திரு. ச. சிற்றம்பலம் தலைமையில் ஆரம்பமானது.

விழாவை ஆரம்பித்து வைத்த திரு ச. சிற்றம்பலம் பேசுகையில், "தமிழ் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள, தமிழ் இலக்கிய விழிப்புணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். எங்களுடைய திணைக்களம் தமிழ் மொழிக்கு விழா எடுப்பதனுல் தனிப்பெருமை பெறுகின்றது. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், கவிஞர்களைக் கௌரவிப்பதில் நாம் பெருமைப் படுகின்ருேம்" என்று சொன்னுர்.

இலக்கியமும் மறுமலர்ச்சியும்

இலக்கியமும் சமுதாய மறுமலர்ச்சியும்" என்ற பொருள்பற்றி திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

பொருட்பால்பகுதி ஏனைய பால்களைவிடச் சிறப்புடைத்து. இலக்கியம் மனித சமுதாயத்தைப் பிரதிபலிப்பது. இலக்கியம் மனிதனை மேற்கொண்டு பேரறங்களைப் பின்பற்றி வாழச்செய்கிறது. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனை வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று வள்ளுவன் கூறுகிறுன்.

இலக்கியம் சமுதாயமறுமலர்ச்சிக்கு வித்திடும்போது இலட்சியங்கள்-நோக்கங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும். தமிழ் மொழி ஆற்றலும்பழமையும் வாய்ந்தது என்று பெருமைப்படும் நாம் பழமையிலிருந்து புதுமையை நாடிச்சென்று கொண்டிருக்கிருேம். காலம் மாறிவிட்டது. பழமையைச் சிந்திக்கும் வேளையிலும் புதிய சூழ்நிலைகளின் மத்தியில்தான் உள்ளோம்

சகலவிதமான - வசதிகள் குறைந்த மக்களும் இவ்வுலகில் வாழ்கிறுர்கள் என்பதை நாம் இடையிடையே மறந்துவிடுகிருேம். வாழ்வைப் பற்றிப் பாடியவர்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றுபாடி வைத்துள்ளார்கள். சமுதாய மலர்ச்சிக்குரிய இலககியம் எப்படி அமையவேண்டும்? நவீன வாழ்க்கை வசதிகளை நவீனசாயல் மிக்க உலகை அமைக்கும் வசதிகளை இலக்கியம் காணவேண்டும். வங்கத்து இலக்கிய எழுச்சி அந்நாட்டு மக்களின் தேசிய மனப்பான்மையை, மொழிப்பற்றைக் காட்டுவதாக உள்ளது. கேரள இலக்கியமும் அப்படித்தான்.

வெளிநாட்டவர்கள் கேட்கும் போது அகநானூறு புறநானூற்றையும் சிலம்பின் பெருமையையும் மாத்திரம் கூறிக்கொண்டிருந்தால் கூடாது. தமிழில் பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கான இலக்கியங்கள் தோன்றவேண்டும்.

கருத்தரங்கு

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த கலாநிதி க. கைலாசபதி பேசுகையில் "குழந்தைகளைக் கூடப்பொறுப்பின்றிப் பெற்றுவிடலாம். ஆனுல் கருத்துக்களை அப்படிச் சொல்லிவிடக்கூடாது. ஈழத்தில் தமிழ் இலக்கியவளர்ச்சி என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானது. இப்போது எமதுசொந்த இலக்கியத்திற்கு நல்லமதிப்பு ஏற்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஒரு பாடமாக அமைய இருக்கின்றது. பல எழுத்தாளர்களும் ஈழத்து இலக்கியம் பற்றி எழுதியுள்ளார்கள். கனகசெந்திநாதன், ஆ. சதாசிவம், நாவற்குழியூர் நடராசன் ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

சமகாலத்து இலக்கியம் பல்வேறு காரணங்களினுல் இங்கு ஆராயப்படவில்லை" என்ருர்.

நாவல்

முதலில் நாவல் இலக்கியம் பற்றி திரு. இளங்கீரன் பேசுகையில், "இலங்கையில்நாவலின் தோற்றத்தைப் பார்த்தால் சுமார் 85, 90 வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தது எனலாம். 1950—1969 வரை நமது நாட்டு நாவல்களைப்பற்றி ஆராய்வோம். 50 வரையும் தமிழ்நாட்டின் எதிரொலியாக ஈழத்து நாவல்கள் இருந்தன. 50க்கு பிறகு ஈழத்தில் புதியபாதை வகுக்கப்பட்டு அதன் பிரதிபலிப்பை எமது நவல்களில் காணமுடிந்தது. வாழ்க்கை சமுதாய நோக்கு என்பன பற்றி புதிய கண்ணேட்டத்துடன் ஒரு பாதிப்பை சலனத்தை அசைவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் படைக்க ஆரம்பித்தார்கள். வாழ்க்கையைப் பிரதிபலிப்பது தான் இலக்கியம் என்று சொன்னுல் அந்த வாழ்க்கைக்கு ஆதாரமானது எது என்பதை உணரவேண்டும்" என்ருர்.

சிறுகதை பற்றி எஸ். பொ.

ஈழத்து சிறுகதை வளர்ச்சி பற்றி திரு. எஸ் பொன்னுத்துரை பேசுகையில், 'சொல்லை வண்ணமுடன் கையாளத்தெரிவது சிறுகதை எழுத்தாளனுக்கு அவசியம் என்பதை நான் பிற்காலத்தில் உணர்ந்தேன். சிறுகதை இலக்கியம் ஈழத்தில் மட்டுமல்ல தென்னக[த்தில்] ...

ஈழத்துப் பரிசோதனைகளுக்குக் களம் அமைத்துத்தரவில்லை. நாங்கள வண்டிலைக் குதிரைக்கு முன்னுல் கட்டுகிருேம். தான் எழுதிய கதையைத் தானே வாசித்து மகிழும் எழுத்தாளர்கள் பலரை எனக்குத்தெரியும். ஈழத்து 3 சிறுகதைத் தொகுதிகளைச் சாகித்திய மண்டலத்தார் பரிசுக்குத் தெரிந்தார்கள். இவை பொருத்தமற்ற கதைகள்' என்ருர்.

நாடகம்

ஈழத்து நாடக வளர்ச்சி பற்றிதேவன்-யாழ்ப்பாணம் பேசுகையில், "படித்தவனும் படியாதவனும் ஈடுபாடு கொண்டுள்ள துறை நாடகம். நாடகம் கால-தேச-வர்த்தமானத்தைத் தாண்டி நிற்பது" என்று கூறினுர்.

கவிதை

'ஈழத்துக் கவிதை இலக்கியம்' பற்றி கவிஞர் இ. முருகையன் பேசுகையில், 'முதலில் எமது இலக்கியத்துறைகள் பற்றிய பூரண அறிவு இருத்தல்வேண்டும். பத்திரிகைகள்தான் முக்கியமாக ஈழத்துக் கவிதைகளுக்கு ஆக்கம்அளித்துவந்துள்ளன. 'மறுமலர்ச்சி'க் கவிஞர்கள் 'கிராம ஊழியன்' என்ற இந்தியப் பத்திரிகைகளிலும் எழுதினர். இன்று இலங்கையில்உள்ள பத்திரிகைகளில் உள்ளவர்களுக்குத் தமிழ்க் கவிதைகளைப் பகுத்து நோக்குகின்ற பண்பு மிகக்குறைவாகக் காணப்படுகின்றது என்ருர்.

திறனுய்வு

'ஈழத்துத் திறனுய்வு' பற்றி திரு. அ. சண்முகதாஸ் பேசுகையில், "மேலை நாடுகளைப் போன்று தமிழ்த் திறனுய்வு ஈழத்தில்வளர்ந்து வருகின்றது. கட்சிகட்டுதல் ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்தில்கூட விமர்சனத்திற்கு இடையூற்றை வளர்க்கிறது. சும்மா எழுதுகிறவனைக்கூட 'முற்போக்கு' 'பிற்போக்கு' என்று கட்சிகட்டிவிடுகிருர்கள். எமது பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களுக்குஇலக்கிய விமர்சனத்துறை ஒரு பாடமாக அமைதல்வேண்டும்" என்ருர்.

நாவற்குழியூர் நடராசன் தலைமையில் கவியரங்கு ஆரம்பமானது மட்டுநகர் கவிஞர் 'திமிலைத்துமிலன்' 'நாளைய பொழுது யாரிட்மோ?' என்ற கவியரங்கை ஆரம்பித்து வைத்தார்,

அடுத்து மன்றம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசுபெற்ற செல்வன் குமாரசாமி தமது கவிதையைப்படித்தார். பகல் நிகழ்ச்சிகள் முடிவடைய மன்றப் பொதுச் செயலாளர் திரு. ...

இந்திரா மந்திரிசபை மாற்றி அமைக்கப்படும்

சி. சுப்பிரமணியம் மந்திரியாகலாம்

புதுடில்லி, செப். 4

இம்மாத மத்தியில் மந்திரி சபையில் பிரதம மந்திரி இந்திராகாந்தி சில மாறுதல்களைச் செய்யக்கூடும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறின,

சென்றதடவை போல இந்தத் தடவை அவ்வளவு பெரிய மாறுதல்கள் இராது என்று கூறப்படுகிறது.

சட்டசபையில் தி மு கவுக்கு மெஜாரிட்டியிருப்பதால் உபதேர்தல் எதிலும் தி மு க வெற்றிபெறுவது உறுதி

ராஜ்ய[சபை]க்கு சுப்பிரமணிய[ம்] தேர்ந்தெடுக்கப் படுவதற்காக முதலமைச்சர் மு கருணுநிதியை சில நண்பர்கள் ... கூறப்ப[டுகிறது].

ஐயாறன் எழுதுவது

"புதியவழி" என்ற தலைப்புடன் நேற்று "ஈழநாடு" பத்திரிகையில் எழுதியிருந்த தலையங்கத்தைப் படித்துவிட்டு பட்டிருப்பு பிரதிநிதியும், தமிழரசுக் கட்சித் தலைவருமான எஸ். எம். இராசமாணிக்கம் அவர்கள் அதிலுள்ள ஒரு முக்கிய யோசனையை ஆதரித்தார்.

அதாவது கட்சி அரசியல் முறை இந்த நாட்டில் எந்த அரசியல் பிரச்னையையும் தீர்க்க முடியாதென்றும் இனி எப்போதும் தீர்க்க முடியாதென்பதை முற்றிலும் ஒப்புக்கொண்டார்.

தாம் மட்டுமல்ல காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாவும் இதே கருத்தைத் தெரிவித்ததாயும் தென் கிழக்கு ஆசிய நாடுகளிலே கட்சி அடிப்படையில் நடக்கும் ஜனாாயக ஆட்சி முறை தோற்றுவிட்டதாகவும் அவர் கருதி இந்தக் கட்சி முறை ஒழிய வேண்டிய அவசியமென்று வற்புறுத்தினுரென்றும் எதிர்க்கட்சியிலும் அரசாங்கக் கட்சியிலும் பலர் பகிரங்கமாக இக்கருத்தைத் தெரிவித்துள்ளதாகவும் சொன்னுர்.

நாட்டை விட கட்சிதான் பெரிது, எப்பாடு பட்டாயினும் தங்கள் கட்சியே எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்றும் இன்று பல கட்சி தலைவர்களும் வேலை செய்து வருகிருர்கள்.

அப்படி இருக்க கட்சி முறை எப்படி ஒழியும்? யார் முதலில் பூனைக்கு மணி கட்டப் போகிருர்கள்? பல தலைவர்களும் தனிப்பட்ட முறையில் கூடி, மனம் விட்டுப் பேசி தேசாபிமானத்துடன் விட்டுக் கொடுத்தால் ஏதாவது வழிபிறக்கலாம்.

கட்சிப் பிரிவினைகளால் தமிழர் தான் அதிக சங்கடப் படுகிறவர்கள். பிச்சை குடியிலே சனிபகவான் புகுந்தது போல், கட்சிப் போட்டிகள் தமிழரின் சங்கடங்களை அதிகரிக்கின்றனர். முதலில் தமிழ்த் தலைவர்கள் நேரில் சந்தித்து, கட்சிகளையே ஒழிக்க முன்வர முடியாதா? இது மற்றவர்களுக்கும் நல்ல முன்மாதிரியாக இருந்து, நாட்டுக்கே நன்மை பயக்கலாம்.

முதல் நம்பர் நடிகரான எம். ஆர். ராதா இன்னும் சிறைப்பட்டுக் கம்பி எண்ணிக் கொண்டிருப்பதை நினைக்க மிக வருத்தமாக உள்ளது.

முன்னர் பாகவதரும், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும், லட்சுமி காந்தன் கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தபோது, சென்னையில் பல கலை அன்பர்கள் சேர்ந்து அரசாங்கத்துக்கு முறையிட்டு அவர்கள் முன்னதாகவே விடுதலையடையும்படி செய்தனர். சிறையிலிருந்து விடுதலை அடைந்ததும், இரு கலைஞர்களும் பல படங்களில் நடித்து பொதுமக்களை மகிழ்வித்தார்கள்.

குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது தான். ஆனுல் இவ்வித கலைஞர் விஷயம் விசேஷமாகக் கருணையுடன் கவனிக்கப்பட வேண்டும். அவர்கள்நீடித்து சிறையில் இருப்பதால் நஷ்டம் பொதுமக்களுக்குத் தான் அதிகம். ஒருவகையில் இது பொது மக்களையும் தண்டிப்பதாகுமல்லவா?

கருணை உள்ளம் படைத்த எம். ஜி. ஆர். தமது பழைய சகாவான எம். ஆர். ராதாவைச் சீக்கிரத்தில் விடுதலை செய்ய முயற்சி எடுத்து, தமிழக அரசை வேண்டினுல் அது வீண் போகாததுடன் அவரது புகழையும் மேம்படுத்தும். சிறையிலிருந்து விடுதலையடைந்தால் அந்த சிறந்த கலைஞர் மீண்டும் அவ்வித தவறு செய்யாமல் அவரது வாழ்க்கையே மாறவும் கூடும். நம்மில் தவறு செய்யாதவர் யாருமுண்டா? கலைஞர்களின் மதிப்பை உணர்ந்த தமிழக அரசு, அவர் விஷயத்தில் கருணைகாட்டி ஏன் ஒரு சான்சை அக் கலைஞருக்கு அளிக்கப்படாது?

0 0 0

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும், மிக்குச் சோதிக்கவேண்டா சுடர் விட்டுளனெங்கள் சோதி, மாதுக்க நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின், சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.

- திருஞானசம்பந்த சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது. ஹோ சி மினுக்குரஷ்யா, சீனம் இவற்றின் ஆதரவு கிடைத்தது.

பல்லாண்டுகளாக நடந்து வந்த இந்தப் போராட்டத்திலே இருதரப்பினருக்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. அமெரிக்கா ஐந்து லட்சம் துருப்புகளை வியட்னுமுக்கு அனுப்பி வைத்த தவறை சமீபத்தில் தான் அமெரிக்காவின்

...னிக்கவேண்டிய விஷயத்தில் அமெரிக்கா உள்ளிட்டுப் பல வல்லரசுகளும் ஒத்துழைப்பதாயின், அந்த துரதிருஷ்ட நாட்டு மக்கள் மீண்டும்அமைதியாக, ஒற்றுமையாக வாழ்ந்து முன்னேற வழி பிறக்கும் மாபெரும் சுதந்திர வீரரான ஹோ சி மின்னுக்குச் செலுத்தககூயடி உண்மையான அஞ்சலியும்அதுவேயாகும்.

காந்தி நூற்றுண்டு நிதி சேகரிப்புப்பத்திரம்

அளவெட்டி, வியா

காந்திநூற்றுண்டு ஞாபகார்த்த நிர்மாண வேலைகளுக்கான நிதியைத் திரட்ட யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ''காந்தி நூற்றுண்டு நிதிச் சேரிப்புப் பத்திரம்'' நேற்று அனுப்பப்பட்டன.

காந்திநூற்றுண்டு நிர்மாண வேலைகளுக்கான காந்தி கிராமம், கஸ்தூரி பாய் இல்லம் ஆகியன அமைக்கத் தேவையான பணத்தை பாடசாலைகளிடம் இருந்து சேகரிப்பதென காந்தி சேவாசங்கம் முடிவு செய்துள்ளது.

இதன்படி யாழ் மாவட்டத்தில் உள்ள் 200க்குஅதிகமான பாடசாலைகளுக்கு ''காந்தி நூற்றுண்டு நிதிச் சேகரிப்புப் பத்திரம் னுப்பப்பட்டுள்ளது.

இப்பத்திரம் பற்றிய வேலைகளை காந்திசேவா சங்கச் செயலாளராதிரு. சி.க வேலாயுதம்பிள்ளை செய்து வருகிருர்.

விவசாயிகளுக்கு அறிவுரை

அளவெட்டி, வியா.

''யாழ். மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கைபண்ணும் நிலத்தில் சணல்பயிரை உண்டு பண்ணிப் பின் உருளைக் கிழங்கை விதைத்தால் சென்ற நான்கு ஆண்டுகளிலும் பெற்ற பயனிலும் கூடுதலாகப் பெறலாம். ஆகவே விவசாயிகள் யாவரும் உடன்நிலத்தில் சணலைப் பயிரிடுங்கள்'' என யாழ். மாவட்ட விவசாய விசாலிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர் விவசாயிகளைக் கேட்டுள்ளார்.

கொலைமுயற்சி வழக்கு:

2 சகோதரருக்கு 6 வருட கடுழியம்

காலி, வியா.

கொலைமுயற்சி வழக்கொன்றில் இரு சகோதரர்களுக்கு காலி அசைஸ் நீதிமன்றம் 6 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

நாகொடை பொலிஸ் பகுதியில் என். எச். கே. ஒவினிஸ் என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக ரி. ரி. ஜோன், ரி ரி. ஜேமிஸ் ஆகிய இருவர் மீதும்குற்றஞ்சுமத்தி வக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எதிரிகள் குற்றவாளிகளென ஜூரிசபையினர் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து காலி அசைஸ் நீதியரசர் திரு. ஏ. எல். எஸ். சிறிமானே இரு சகோதரர்களுக்கும் 6 வருட சிறைத் தண்டனை விதித்தார்.

மரண அறிவித்தல்

விசுவலிங்கம் சரவணமுத்து பத்தர்

விசுவலிங்கம் சரவணமுத்து பத்தர் அவர்கள் இறைவனடி அடைந்து விட்டார் அன்னுரின் பூதவுடல் காங்கேசன் துறை வீதி, 513-ம் நம்பர் இல்லத்திலிருந்து இன்று பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் பிள்ளைகள்: ச கந்தசாமி, ச. சடாட்சரம், ச. தங்கராசா. மருமகன்: ச. மயில்வாகனம். 1081

...என்று அரசியல் வட்டாரங்கள் கூறின,

சென்றதடவை போல இந்தத் தடவை அவ்வளவு பெரிய மாறுதல்கள் இராது என்று கூறப்படுகிறது, சென்றதடவை பலருடைய இலாகாக்கள் மாற்றப்பட்டன.

உணவு விவசாய மந்திரி ஜகஜீவன்ராமை உதவிப் பிரதமமந்திரியாக்க வேண்டும் என்று ஹரிஜன எம். பிக்களில் ஒருபிரிவினர் கோரிவருகின்றனர். அவர்களில் சிலர் இரண்டு நாட்களுக்கு முன்பு இங்கு கூடி ஜகஜீவன் ராமின் விஷயத்தை வற்புறுத்துவது என்று முடிவுசெய்தனர்.

ஆனுல் இந்த யோசனையைப் பிரதம மந்திரி ஏற்பாரா என்பது சந்தேகமாயிருக்கிறது. மந்திரிசபையிலிருந்து மொரார்ஜிதேசாய் ராஜினுமாச்செய்தபிறகு பிரதமருக்கு அடுத்தபடியாக முக்கிய இடத்தை உள்துறை மந்திரி சவான் வகிக்கிருர். இதை மாற்ற அவர் விரும்பவில்லை என்று சொல்லப்படுகிறது

ஆந்திராவைச் சேர்ந்த டி சஞ்சிவய்யா மந்திரிசபையில் இடம்பெறலாம் என்று பேச்சு அடிபடுகிறது சஞ்சீவய்யா இந்திராகாந்தியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்று கூறப்படுகிறது அதனுல்தான் அவரை உபராஷ்டிரபதி பதவிக்கு நிறுத்த இந்திராகாந்தி விரும்பியதாகக் கூறப்படுகிறது ஆனுல் குறைந்தவயதுடையதாம் உபராஷ்டிரபதியாக விரும்பவில்லை என்று சஞ்சீவய்யா கூறிவிட்டார்.

நிதிஇலாகாவை பிரதமமந்திரி எப்படி மாற்றியமைக்கப்போகிருர் என்பதும் பொருளாதார சீர்மை இலாகாவுக்கு அவர் யாரைத் தேர்ந் தெடுக்கப்போகிருர் என்பதும்தான் முக்கியமான பிரச்னையாக விளங்கும். ரெவின்யூ, செலவு இலாகா தனியாகப் பிரிக்கப்பட்டு பி ஆர் ஜகத் போன்றவரிடம் ஒப்படைக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது

பொருளாதாரச்சீர்மை இலாகா மந்திரியாக சி சுப்பிரமணியம் நியமிக்கப்படலாம் என்று பிரஸ்தாபிக்கப்படுகிறது எஸ் எஸ் வாசன் காலமானதால், ராஜ்யசபையில் ஏற்பட்டுள்ளகாலிஸ்தானத்துக்கான உபதேர்தலில் (தமிழ்நாடு அசெம்பிளிமெம்பர்களால் இந்த ஸ்தானத்துக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்) திரு சுப்ரமண்யம் நிற்கலாம் என்பது ஊகமாகும் 1970ல் ராஜ்ய சபைக்கு நடக்கவிருக்கும் தேர்தலில் தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு ஒரு ஸ்தானம் தான் கிடைக்கும் என்பதே நிலைமையாகும் தமிழ்நாடு

...தொடங்கப்படுவதற்காக முதலமைச்சர் மு கருணுநிதியை சில நண்பர்கள் அணுகியிருப்பதாகக் கூறப்படுகிறது

பாடசாலை கட்டிட திறப்பு விழா

புலோலி, வியாழன்

மேலைப் புலோலிச் சைவப் பிரகாச வித்தியாசாலை புதிய கட்டிடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் உருவப் படத்திரை நீக்கமும் இன்று பிற்பகல் 6 மணியளவில் உடுப்பிட்டி எம். பியும் உபசபாநாயகருமான திரு. மு சிவசிதம்பரத்தின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமாநில வித்தியாதிபதி திரு. சி. தணிகாசலம் கலந்து கொள்ள விருக்கிருர்

வடமராட்சி காரியாதிகாரி திரு க ஜெயகாந்தன் பரிசுகள் வழங்குவார்.

அரசாங்கத்திடம் கோரிக்கை

புலோலி, வியாழன்

உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த துன்னுலை தெற்குக் கிராமத்திலுள்ள ஆட்டுப்பட்டி என்ற காணிக்குள் பல தலைமுறைகளாகக் குடியிருந்துவரும் சிறுபான்மைத் தமிழர் குடும்பத்தினருக்கு அரசாங்கம் இக்காணியை எடுத்து வழங்க வேண்டுமெனக்கோரும் தீர்மானம் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் வடமராட்சிக்கிளையின் 10வது ஆண்டுவிழாவில் நிறைவேற்றப்பட்டது

சபைக் காரியதரிசி திரு. சி. செல்லையா தமது அறிக்கையில் மிகவும் நெருக்கடியான கட்டத்தில் விழா நடைபெறுகிறது என்றும், அங்கத்தவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

கடற்சாதனை...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

இன்று விஞ்ஞான ரீதியில் எமது வீட்டு முற்றத்திலும் நெல் விளைவிக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன

இன்று சீன, ஜப்பான், பிலிப்பைன்ஸ்போன்ற நாடுகளில்கடற்சாதனைகளை, சிறந்த சத்துள்ள உணவுகளாக்கி, உண்ணுகிருர்கள். எனவே எமது மத்தியிலுள்ள கடலில் இருக்கும் கடற்சாதனையைக் கொண்டும், கடல் நீரில் உற்பத்தி செய்யக் கூடிய, செயற்கை முத்தைக் கொண்டும் நாம் பெரிதும் பலனடைய முடியும்.

...கையாளத்தெரிவது சிறுகதை எழுத்தாளனுக்கு அவசியம் என்பதை நான் பிற்காலத்தில் உணர்ந்தேன். சிறுகதை இலக்கியம் ஈழத்தில் மட்டுமல்ல தென்னகத்திலும் வளரவில்லை. இன்றையஈழத்துப்பத்திரிகைகள்

...திய கவிதைப் போட்டியில் முதற்பரிசுபெற்ற செல்வன் குமாரசாமி தமது கவிதையைப்படித்தார். பகல் நிகழ்ச்சிகள் முடிவடைய மன்றப் பொதுச் செயலாளர் திரு. வி, பத்மநாதன் நன்றி தெரிவித்தார்.

"தமிழர்கள் முதலில் ஒன்றுபட வேண்டும்"

— பரு. எம். பி.

— நமது புலோலி நிருபர் கே. சூரியமூர்த்தி —

புலோலி, வியாழன்

''மனித இனத்தின் வாழ்க்கையோடு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்ட தெய்வவழிபாடு மனித வாழ்வின் உயர்ச்சிக்கும் சமாதான வாழ்விற்கும் மிக மிக அவசியம்

இப்படியான நல்ல கோட்பாடுகளைச் சிந்திக்கக்கூடிய சக்தி படைத்திருப்பதினுலும் இப்படியான நற்செயல்களை செயலில் செய்வதற்கான வழிவகைகளை கையாளக்கூடிய தன்மை கொண்டிருப்பதினுலுமே உலகில் உள்ள பிற உயிர்களை விட மனிதன் உயர்ந்தவனுக மதிக்கப்படுகிருன். அந்த உயர்ந்த மனிதன்தான் இன்று சாதி, மத வியாதி பிடித்து அலைகிருர்கள்'' என்று அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை வடமராட்சிக் கிளையின் 10-வது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறினுர். ஆசிரியர் மு. செல்லப்பாக்கியம் தலைமை வகித்தார்.

திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில், ''இந்நாட்டில் சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு அடிப்படையான உரிமைகள் வேண்டும் என்று கேட்கின்ருேம். நாங்கள் எங்கள் உரிமைகளை பெறவேண்டுமென்ருல் இதற்கு விடிவு காண தமிழ் சமுதாயம் ஒன்றுசேரவேண்டும். நம் சமுதாயத்தில் பிரிவினை இருக்கும்வரை ஒரு காலமும் பிரச்னை தீராது. நாங்கள் ஒற்றுமையாக இருக்க பெரும்பான்மைத்தமிழர்கள் கைகொடுக்கவேண்டும். எல்லோரும் ஒடுமித்து கைகொடுத்தால் தென்னிலங்கையில் உள்ள அரசியல்வைத்தியர்களிடம் நம் சாதி, மத நோயைக் காட்ட வேண்டிய நிலை ஏற்படாது நம்மக்களின்கையாலேஒத்துழைத்து ஆலய கதவுகளை திறக்கலாம்.

வடமராட்சியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் இருக்கின்றன. அந்த காணிகளில் குடியிருக்க விரும்பும் நிலமற்றவர்கள் என்னிடம் தெரிவித்தால் உடனடியாக நிவாரணம் காண நான் வழி வகுப்பேன்'' என்ருர்.

அடுத்த பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் உடுப்பிட்டித் தொகுதிக்கு போட்டியிடவிருக்கும் திரு. பொன். குமாரசாமி பேசுகையில், ''தமிழ் மக்களிடையே சாபக்கேடாக உள்ள சாதிப்பிரச்னைக்கு விடிவு காணவேண்டுமென்ருல் சிறுபான்மைத் தமிழர்களாகிய நாங்கள் ஒன்று திரண்டு ஒரு கொடியின் கீழ் தலைமை தாங்கிப் போராடவேண்டும். இன்று நிலவி வரும் பிரச்னைகளுக்கும் சோஷலிச அரசாங்கம் மூலம்தான் தீர்வு காண முடியும். பண்டாரநாயக்கா காலத்தில் எவ்வளவோ மனமாற்றம் ஏற்பட்டது'' என்ருர்.

அகில இலங்கைச் சிறுபான்மைத்தமிழர் மகா சபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில், ''சிறுபான்மைத் தமிழர்களின் மனித உரிமைகளைத் தராவிட்டால் எங்களுடைய கோரிக்கைகளை ஏற்று நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ந்து உண்ணுவிரதப் போராட்டம் நடத்துவோம். கடந்த மாதம் கச்சேரி வாசலில் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி உண்ணுவிரதம் இருந்தோம். உண்ணுவிரதத்தை விடும்படியும் இம்மாதம் 27-ந் திகதி பேச்சுவார்த்தை நடத்துவதாக பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா அறிவித்திருந்தார். பேச்சுவார்த்தையில் எங்கள் உரிமைகளை தராவிட்டால் தொடர்ந்து உண்ணுவிரதம் இருப்போம்'' என்று கூறினுர்.

மற்றும் திரு மு. சிற்றம்பலம், வழக்கறிஞர் பண்டிதர் வி. பரந்தாமன், பொ. அப்பையா ஆகியோரும் சொற் பொழிவாற்றினுர்கள்.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தல் விழாவில் நடைபெற்றது.

தலைவர் திரு முசெல்வபாக்கியம் ஆசிரியர், உபதலைவர் திரு ஆ கிருஷ்ணபிள்ளை சாஸ்திரியார், நிர்வாக காரியதரிசி கா வடிவேலு ஆசிரியர், பொதுக்காரிய தரிசி எஸ் கே ராசேந்திரம், பொருளாளர் பொ கனக சபை, 75 பேர் கொண்டநிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டன.

...வர முடியாதா? இது மற்றவர்களுக்கும் நல்ல முன்மாதிரியாக இருந்து, நாட்டுக்கே நன்மை பயக்கலாம்.

...இறையே வந்து சார்மின்களே.

- திருஞானசம்பந்த சுவாமிகள்.

'கீரிமலையில் பொலிஸ் நிலையம் நிறுவுக'

அளவெட்டி, வியா

'புனித ஸ்தலமானகீரிமலையில் காலத்துக்கு காலம் காடைத்தனமும் திருட்டுக்களும் குடிகாரர்களின் தொல்லையும் ஏனைய குற்றங்களும் அதிகரித்து வருவதால் இங்கு ஒரு பொலிஸ் நிலையம் கட்டாயம் நிறுவப்படவேண்டும்.'

இவ்வாறு பொலிஸ் மா-அதிபர் திரு அலெரிக் அபயகுணவர்த்தனவைக்கோரும் மகஜர் ஒன்றை கீரிமலை நகுலேஸ்வரா சனசமூக நிலைய தலைவர் திரு கனகமகேந்திரா அனுப்பியுள்ளார்.

அம் மகஜரில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கீரிமலையில் காலத்துக்கு காலம் காடைத்தனமும் திருட்டுக்களும் குடிகாரர்களின் தொல்லையும் ஏனைய குற்றங்களும் பெருகி வருகின்றன. இங்கு கள்ளச்சாராய வியாபாரம் அதிகரித்திருப்பதாலும் கள்ளுக்குப் பெயர்போன கூவில் என்னும் கிராமம் அயலில் இருப்பதாலும் குடிகாரர்களின் தொல்லையிலிருந்து இப்பகுதியைக்காக்க முடியாதிருக்கிறது,

கீரிமலை சரித்திரப் பிரசித்தி பெற்றதும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் தன்மைபெற்றதும் இந்துக்களின் புண்ணிய பிரதேசமுமாகும். இத்தகைய தொல்லைகளில்இருந்து இப்பிரதேசத்தை காக்க வேண்டுமாயின் இங்கு பொலிஸ் நிலையம் ஒன்று நிறுவவேண்டும் என குறிபிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களையும் மாநகரசபையுடன் சேர்த்து மார்ட்டின் கமிஷனுடன் சேர்க்க வேண்டுமென நல்லூர் வட்டார அங்கத்தவரான திரு. அ. நடராஜா இவ்வருடம் மே மாதம் 28-ம் திகதி மாநகர சபையில் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதைத் தொடர்ந்து, இத் தீர்மானம்ஜூன்மாதம் 23-ம் திகதி நகர முதல்வர் திரு. நாகராஜாவினுல் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சு வடபகுதி உதவி உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு பணித்துள்ளது.

குறிப்பிட்ட நல்லூர், கொக்குவில் கிராம சபைகள் இதனை மீண்டும் ஆட்சேபித்தால், அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா அவ் ஆட்சேபனைகளை நிராகரித்து, சட்ட பூர்வமாக இவைகளை மாநகர சபையுடன் சேர்த்து 25 வட்டாரங்களாக்கலாம் என சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். (கா. நி)

......

புலோலி, வியாழன்

வருடாவருடம் நடக்கும் துன்னுலை வடக்கு சகாய மாதா திருநாள் இம்மாதம் 17ம் திகதி கோவில் கொடி ஏற்று விழாவுடன் ஆரம்பமாகி 20ம் திகதி இரவு கோவில் சுற்றுப் பிரார்த்தனை நடைபெற்று அடுத்த நாள் திவ்விய பூசையுடன் மாதாவின் உற்சவம் முடிவடையும்.

விற்பனைக்கு

வளர்ப்பவர் வெளிநாடு செல்வதால் உடன் விற்பனைக்கு நல்ல இன 60 பேட்டுக்கோழிகளும் அடுத்த மாதத்தில் முட்டைஇடும் 3 மாத 65 பேட்டுக்குஞ்சும் உண்டு விலை 1200-00க்குள் கிடைக்கும். ந. செல்வலிங்கம், நம். 6 ஓடேலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1376

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கததிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org